தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (தேபோஆ)

# ஆண்டு அறிக்கை

# 2018

முகவரி

241, பூங்கா வீதி,

கொழும்பு 05

**இணையத்தளம்**

www.ntc.gov.lk

**மின் அஞ்சல்**

info@ntc.gov.lk

**துரித அழைப்பு**

1955

NTC/PL/Annual Report / 2018 2019.07.30

கௌரவ போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்,

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு,

7ஆவது மாடி,

செத்சிறிபாய கட்டம் 11

பத்தரமுல்லை.

**<u>ஆண்டறிக்கை – 2018</u>**

1971இன் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14 (2) பிரிவின் நியதிகளின் படியும் அரசாங்கத் தொழில் முயற்சிகளின் நல்லாட்சிக்கான வழிகாட்டல்களின் அத்தியாயங்கள் 05 மற்றும் 06 இன் பிரகாரமும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31ஆந் திகதி முடிவுற்ற ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை, வருடாந்த கணக்குகள் அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ஆகியவற்றை மிகவும் மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன்.

ஜனக்க மல்லிமாரச்சி,

தலைவர்,

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

# உள்ளடக்கம்


| அத்தியாயம் | பக்கம் |
|---|---|
| ஆணைக்குழுவின் அங்கத்தவர் குழு | 01 |
| தலைவரின் செய்தி | 03 |
| மொத்தப் பகுப்பாய்வு | 05 |
| ஆணைக்குழுவின் அமைப்பு | 06 |
| 2018 ஆம் ஆண்டின் செயலாற்றுகை | 07 |
| வருடாந்த கணக்குகள் | 33 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 53 |

# ஆணைக்குழுவின் அங்கத்தவர் குழு

**2018 ஜனவரி முதல் 2018 திசெம்பர் வரை**

| | | |
|---|---|---|
| 1. | பொறி.திரு. எம்.ஏ.பி. ஹேமச்சந்திர | - தலைவர் |
| 2. | திரு. ஆனந்த விஜயரத்ன | - உறுப்பினர்(பதவி வழி) |
| 3. | திரு. ஏ.எம்.ஆர.ஜே.கே. ஜயசிங்க | - உறுப்பினர்(பதவி வழி) |
| 4. | திரு. ஏ.எம்.அசங்க தயாரத்ன | - உறுப்பினர்(பதவி வழி) |
| 5. | பேராசிரியர் ஜே.எம்.எஸ்.ஜே. பண்டார | - உறுப்பினர் |
| 6. | விரிவுரையாளர் திமந்த டி சில்வா | - உறுப்பினர் |
| 7. | பட்டயப் பொறி. எஸ்.பி.டப்ளியு. ஜயசிறிவர்தன | - உறுப்பினர் |
| 8. | சட்டத்தரணி தனுஷ்க வெலிகம | - உறுப்பினர் |

## சபைக் கூட்டம் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள்

2018ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை 11 ஆகும்.

2018ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்களின் எண்ணிக்கை 03 ஆகும்.

# தலைவரின் செய்தி



1991 இல 37ஐக் கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம் 1994.04.04ஆந் திகதி தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நிறுவப்பட்டதுடன், அன்று முதல் இன்று வரை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் ஓர் ஒழுங்குபடுத்தற் நிறுவனமாக, இலங்கை மக்களுக்கு நம்பிக்கைமிகு, வினைத்திறன்மிக்க மற்றும் சௌகரியமிக்க பேருந்துச் சேவையினை பெற்றுக் கொடுக்கும் நன்னோக்கில் பல்வேறு செயற்றிட்டங்கள் பலவற்றைச் செயற்படுத்தியுள்ளது. அதன் படி 2018ஆம் ஆண்டினுள் குறிப்பிட்ட நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்வதற்கு பல பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவற்றுள் விசேடமாக சமூக நலனை நோக்காகக் கொண்டு பேருந்துச் சேவைகளாகச் செயற்படுத்தப்படும் 'சிசு செரிய', 'கெமி செரிய', 'நிசி செரிய' ஆகிய செயற்றிட்டங்கள் மற்றும் அனைத்து பேருந்துப் பயணிகள் போக்குவரத்துத் துறையினதும் மேம்பாட்டிற்காகச் செயற்படுத்தப்படும் செயற்றிட்டங்கள் பல உண்டு. பாடசாலை மாணவர்கள் உள மற்றும் உடல் ரீதியான கஷ்டங்களின்றி நேரகாலத்துடன் பாடசாலைக்கு செல்லும் மற்றும் பாதுகாப்பாக வீடு திரும்பும் வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்குடன் 'சிசு செரிய' பேருந்துச் சேவை செயற்றிட்டமும் போக்குவரத்து வசதிகளற்ற பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு தமது நாளாந்த தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு வசதியினை வழங்கும் நோக்கில் 'கெமி செரிய' பேருந்துச் சேவை செயற்றிட்டமும் இரவு வேளைகளில் மற்றும் அதிகாலையில் பேருந்துச் சேவைகளில் காணப்பட்ட பற்றாக்குறையினால் பயணிகள் முகங்கொடுத்த அசௌகரியங்களை இல்லாதொழிக்க 'நிசி செரிய' செயற்றிட்டமும் செயற்படுத்தப்படுகின்றன.

நாட்டில் அனைத்து பயணிக்கும் மக்களுக்கு நம்பகமான, பாதுகாப்புமிகு, வசதிமிக்க பொதுப் போக்குவரத்துச் சேவையொன்றினை உறுதிப்படுத்துவதற்கு 2018ஆம் ஆண்டிலும் பேருந்து ஓட்டுனர்களுக்கும் சாரதிகளுக்கும் பயிற்சி அளிப்பதும் பேருந்துப் போக்குவரத்துத் துறையில் உள்ள தரப்பினரையும் அறிவுறுத்துவதும் உரிய முறையில் பாதையினைப் பயன்படுத்துவதன் மூலம் விபத்துக்களைக் குறைத்துக் கொள்வது தொடர்பில் பாடசாலை சிறார்களை அறிவுறுத்தும் செயலமர்வுகளை நடாத்துவதும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பேருந்துச் சேவையினை உரிய நேரத்திற்கு வழங்குவதன் மூலம் பொதுப் பேருந்துப் போக்குவரத்துச் சேவையின் தரத்தினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இபொச உட்பட எல்லா பேருந்து ஓட்டுனர்களுக்கும் சம சந்தர்ப்பத்தினை வழங்கும் விதத்தில் விஞ்ஞான ரீதியான ஒன்றிணைந்த சுழல்முறை நேர அட்டவணையைத் தயாரிக்கும் வேலைத்திட்டத்தினைச் செயற்படுத்துவதற்கு ஏனைய ஆண்டுகளில் போன்றே இவ்வாண்டிலும் குறிப்பிடத்தக்களவு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

போக்குவரத்து ஆணைக்குழுபேருந்துப் பயணிகள் போக்குவரத்துக் கொள்கையினைத் தயாரித்தல் தொடர்பில் அரசுக்கு ஆலோசனை வழங்கும் நிறுவனமாகையால் இவ்வருடத்தில் தற்போது காணப்படும் 2009ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட போக்குவரத்துக் கொள்கையினை இற்றைப்படுத்துதல் தொடர்பில் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சுடன் இணைந்து பணிகள் பலவற்றை

நிறைவேற்றி உள்ளதுடன் புதிய போக்குவரத்துக் கொள்கையின் வரைவு அறிக்கையினை இலங்கைப் பாராளுமன்றத்தின் போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் பிரிவுக் கண்காணிப்புக் கமிட்டிக்கு முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக தற்போது காணப்படும் 2002ஆம் ஆண்டு முதல் அமுலில் உள்ள பேருந்துக் கட்டணக் கொள்கையையும் தற்காலத்திற்குப் பொருந்தும் படி திருத்தியமைப்பதற்கும் 2018ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சுடன் இணைந்து பேச்சுவார்த்தைகள் நடாத்துதல் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிகளை மென்மேலும் எளிதாக்குதல் மற்றும் பொது மக்களுக்கு தரமிக்க, பாதுகாப்புமிகு மற்றும் வசதிமிக்க போக்குவரத்துச் சேவை ஒன்றினைப் பெற்றுக் கொடுப்பதற்கு நிறுவன நடவடிக்கைகளை சட்டபூர்வமாக மேற்கொள்வதற்கு 1991இன் இல 37 கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தினை திருத்துவதற்கு உரிய பணிகளை ஆரம்பித்தல் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், ஒவ்வொரு வருடமும் வெளியிடப்படும் 'போக்குவரத்துப் புள்ளிவிபர அறிக்கை' போக்குவரத்துத் துறை சம்பந்தமாக புதிய போக்குகளைக் கண்டுபிடித்தல், கொள்கையாக்கம், புதிய திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களின் வசதிக்காக போக்குவரத்துத் துறைக்கு உரிய எல்லா தரவுகளையும் ஒன்று சேர்த்து 2017 அறிக்கை இவ்வருடத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையினுள் பொதுப் போக்குவரத்து ஊடகங்களுள் மிகவும் பிரபல்யமாக உள்ள ஊடகமான பேருந்துப் போக்குவரத்தினை தரமிக்கதாக விருத்தி செய்யும் பொருட்டும் அதன் பால் கேள்வியினைப் படிப்படியாக அதிகரிக்கச் செய்து தனியார் வாகனங்களைப் பயன்படுத்துவதைக் குறைப்பதற்கும் நோக்காகக் கொண்டு நாட்டின் பல்வேறு சனநெருக்கடியுள்ள பிரதேசங்களில் நவீன வசதிகள் கொண்ட பேருந்துத் தரிப்பிடங்களை அமைக்கும் செயற்றிட்டமும் அமுலில் உள்ளதுடன் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்ட மூன்று பேருந்துத் தரிப்பிடங்கள் 2018 ஜனவரி மாதம் மக்களுக்கு கையளிக்கப்பட்டன.

மேலும், பொதுப் போக்குவரத்திற்காக புவியியல் நிலைமையினை அடிப்படையாகக் கொண்ட GPS தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வாகனங்களைக் கண்காணிப்பதன் மூலம் உடனடியாகப் பேருந்துகளை முறைப்படுத்தவும் பயணிகள் முறைப்பாட்டினை விசாரணை செய்தல் மற்றும் தகவல்கள் வழங்குதல் ஆகியவற்றிற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்விதமாக இலங்கைப் பொதுப் பயணிகள் போக்குவரத்து பேருந்துச் சேவையின் தரத்தினைப் பாதுகாத்து, நம்பிக்கைமிகு சேவையொன்றினை வழங்குவதற்கு எடுக்கும் முயற்சியில் அதற்காகத் துணை புரியும் கௌரவ போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர், பிரதி அமைச்சர், செயலாளர் உட்பட அமைச்சின் எல்லா அதிகாரிகளுக்கும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபை மற்றும் அனைத்து பணிக்குழாத்தினருக்கும் எல்லா பேருந்து ஓட்டுனர்களுக்கும் மற்றும் அவர்களது பணிக் குழாத்தினருக்கும், எல்லா சந்தர்ப்பங்களிலும் ஆதரவு நல்கும் இலங்கைப் பொலிஸின் மற்றும் போக்குவரத்துடன் சம்பந்தப்பட்ட எல்லா திணைக்களங்கள், நிறுவனங்களின் எல்லா அதிகாரிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஜனக்க மல்லிமாரச்சி**
**தலைவர்**
**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு**

# மொத்தப் பகுப்பாய்வு

## எமது நோக்கு

***நாட்டினுள் சமூக-பொருளாதார அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்காக தரமிக்க, ஆகுசெலவு விளைபயன்மிக்க மற்றும் பாதுகாப்புமிக்க ஒன்றிணைக்கப்பட்ட போக்குவரத்துக் கட்டமைப்பு மற்றும் சேவை ஆகியவற்றின் மூலம் இலங்கையின் எல்லா குடிமக்களினதும் பல்வேறுபட்ட போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்திசெய்தலை உறுதிப்படுத்துதல்.***

## எமது பணி

***பயணிகள் போக்குவரத்து தொடர்பான தேசிய கொள்கைக் குறித்து இலங்கை அரசிற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றும் திறன்மிகு பஸ் போக்குவரத்து முறைமையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஒழுங்குபடுத்தற் சட்டகத்தை உருவாக்குதல்***

## எமது இலக்குகளும் /குறிக்கோள்களும்

- பேருந்துச் சேவையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை தரம் மிக்கதாகவும் போதிய அளவானதாகவும் உயர் மட்டத்தில் தொடர்ந்தும் பேணுதல்.
- வினைத்திறன்மிக்க போக்குவரத்து முறைமை ஒன்றினை அபிவிருத்தி செய்தல்
- தங்களுக்கு மிகவும் பொருத்தமான பேருந்துச் சேவையைத் தெரிவு செய்வதற்கு உதவும் விதத்தில் போக்குவரத்து முறைமை ஒன்றை அபிவிருத்தி செய்தல்
- பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுள்ள செயற்பாட்டாளர்களின் உறுதிப்பாடு மற்றும் நிலைப்பாட்டினை உறுதி செய்தல்
- கிராமப்புற மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பிரதேசங்களில் செயற்படுத்தப்படும் குறைந்த வருமானம் ஈட்டும் ஆனால் சமூக ரீதியில் அவசியமான பேருந்துச் சேவைகளுக்கு நிதி உதவி அளித்தல்
- பயணிகள் போக்குவரத்துப் பேருந்துச் சேவைகள் மூலம் ஏற்படும் சுற்றாடல் பாதிப்பைத் தடுப்பதற்கான ஒரு வழிமுறையினைத் திட்டமிட்டு அதனை அபிவிருத்தி செய்தல்
- பேருந்து இயங்கும் நேரத்தை ஒழுங்கமைப்பதன் மூலம் பேருந்துகளின் விளைபயனை அதிகரித்தல்
- பேருந்துகளை இயக்கும் வேளையில் பாதுகாப்பையும் ஒழுங்கையும் உறுதி செய்தல்
- மாகாணங்களுக்கிடையில் மற்றும் மாகாணச் சேவையில் ஈடுபடும் பேருந்து சேவைகளின் போக்குவரத்து முறைமைகளை ஒருங்கிணைத்தல்
- நாட்டின் மொத்த உழைப்புத் திறனை மேம்படுத்துதல்

# ஆணைக்குழுவின் அமைப்பு

ஆணைக்குழு மூன்று பதவிவழி அங்கத்தவர்களையும் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் போக்குவரத்து அமைச்சரினால் நியமிக்கப்பட்ட மேலும் ஐந்து அங்கத்தவர்களையும் கொண்டுள்ளது. ஆணைக்குழு ஒழுங்குசார் கட்டமைப்பு தலைவர், பணிப்பாளர் நாயகம் மற்றும் திட்டமிடல், இயக்கம் மற்றும் சேவைகள் கண்காணிப்பு, தர உறுதிப்பாடு, வெளியார் தொடர்பு, நிதி மற்றும் கொள்வனவு ஆகிய 4 திணைக்களங்களுக்குப் பொறுப்பாகச் செயற்படும் பணிப்பாளர்கள் நால்வரையும் கொண்டது.

2018ஆம் ஆண்டின் இறுதியில் ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 204 ஆக இருந்ததுடன், சேவையில் ஈடுபட்டுள்ள நிரந்தரப் பணியாளர்களின் எண்ணிக்கை 195 ஆகும்.

**2018.12.31 ஆந் திகதியில் உள்ளவாறான தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஊழியர் எண்ணிக்கை**

| தொடரிலக்கம் | புதவிப் பெயர் | பணியாளர் தொகுதி | அங்கீகரிக்கப்பட்ட பணியணி | திகதியன்று சேவையில் ஈடுபட்டிருந்த பதவியணியினர் |
|---|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம் | HM 2- 1 | 01 | - |
| 02 | பணிப்பாளர் | HM 1-1 | 04 | 04 |
| 03 | உதவிப் பணிப்பாளர் | MM 1-1 | 17 | 13 |
| 04 | கனிஷ்ட முகாமையாளர் | JM 1-1 | 21 | 20 |
| 05 | முகாமைத்துவ உதவியாளர் | MA 4 | 36 | 37 |
| 06 | முகாமைத்துவ உதவியாளர் | MA 2-1 | 03 | 01 |
| 07 | முகாமைத்துவ உதவியாளர் | MA 1-1 | 76 | 74 |
| 08 | சாரதி | PL 3 | 13 | 15 |
| 09 | அலுவலக உதவியாளர் | PL 1 | 12 | 11 |
| 10 | நேரக் காப்பாளர் | PL 1 | 18 | 18 |
| 11 | தொழிலாளர் | PL 1 | 3 | 02 |
| | **மொத்தம்** | | **204** | **195** |

மூலம் - கட்டுப்பாட்டுத் திணைக்களம், தேபோஆ

# 2018ஆம் ஆண்டின் செயலாற்றுகை

தற்போது இலங்கையின் பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவை 38.8மூ துறைசார் பங்களிப்பினை வழங்கி மிகவும் பிரபலமிக்க பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவையாக பாரிய பணியொன்றினை நிறைவேற்றுகின்றது. இத்துறைசார் பங்களிப்பு படிப்படியாகக் குறைவடையும் பின்னணியில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அடிக்கடி இப்போக்குவரத்து வலையமைப்பில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகளைத் தேடிப் பார்த்து தீர்ப்பதுடன் பயணிக்கும் மக்களின் மனதில் அது குறித்து திருப்திபட்ட உணர்வினை மெருகூட்ட அளப்பரிய முயற்சியினை மேற்கொண்டுள்ளது.

இலங்கையில் மாத்திரமன்று உலகிலேயே தற்போது நிலவும் பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல்சார் பல பிரரச்சினைகளுக்கு உறுதியான தீர்வினைத் தேடும் முயற்சியில் போக்குவரத்தின் பால் மாபெரும் பொறுப்பொன்று சாட்டப்பட்டுள்ளமை உள்ளங்கை நெல்லிக்கனியாகும். இலங்கையிலும் பல நகரங்களில் காலை மற்றும் மாலை வேளைகளில் பாதைகளில் காணப்படும் கடும் வாகன நெருக்கடி வேலை செய்யும் அதிகமான மக்களின் காலத்தை பெரிதும் வீணடிப்பதுடன், களைப்பு மிகுதியால் உடல் ஆரோக்கியம் சீர்குலையவும் செய்கின்றது. இதற்கு மேலதிகமாக தேவையற்ற விதத்தில் ஏற்படும் எரிபொருள் தகனத்தினால் சூழல் வெப்பமடைதல் மற்றும் வாகனப் புகை காரணமாக ஏற்படும் சுற்றாடல் மாசடைவினையும் கவனத்திற் கொள்ளாதிருக்க முடியாது. நாளுக்கு நாளுக்கு தீவிரமடையும் இப்பிரச்சினைக்கு காலத்திற்கேற்ற தீர்வு பொதுப் பயணிகள் போக்குவரத்துப் பேருந்துச் சேவையினை தரத்தில் உயர்ந்ததாகவும் நம்பிக்கைமிகு, வினைத்திறன்மிக்க மற்றும் வசதழமிக்க சேவையொன்றாகக் கட்டியெழுப்புவதும் தனியார் வாகனப் பாவனையை முடிந்தளவு குறைப்பதும் ஆகும்.

அதன் படி, இலங்கையில் பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவையினை ஒழுங்குபடுத்தும் தேசிய நிறுவனமாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தமது வகிபங்கினை உரிய முறையில் புரிந்துகொண்டு அதன் அபிவிருத்திக்காக செயற்றிட்டங்கள் பலவற்றை அமுல்படுத்தியுள்ளது.

## 1. சமூக நலனை முதன்மைப்படுத்தும் பேருந்துச சேவையினை வழங்குதல்

தேசிய பொக்குவரத்து ஆணைக்குழு சமூக நலனை நோக்காகக் கொண்டு பேருந்துச் சேவைகளாக பாடசாலை மாணவச் சமூகத்திற்காகவே ஒதுக்கப்பட்ட ‘சிசு செரிய’ பேருந்துச் சேவையும், வேறு எவ்விதப் போக்குவரத்து ஊடகங்களும் அற்ற கஷ்டப் பிரதேச பாதைகளுக்கு ‘கெமி செரிய’ பேருந்துச் சேவையும், இரவில் கடைசிப் பயண முறையிலும் மற்றும் அதிகாலையில் முதல் பயண முறையிலும் ஓடும் ‘நிசி செரிய’ சேவையும் என செயற்றிட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

## 1.1 பாடசாலைப் பேருந்துச் சேவை செயற்றிட்டம் ‘சிசு செரிய’




சிசு செரிய’ பேருந்துச் சேவை’

சிசு செரிய பேருந்துச் சேவை செயற்றிட்டம், பாடசாலைச் சிறார்களுக்கு நேரகாலத்துக்கு பாடசாலைக்கு சென்று களைப்பின்றி கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டு, பாதுகாப்பாக வீடு திரும்பக்கூடிய வசதியினை ஏற்படுத்திக் கொடுக்கும் முக்கியமாக நோக்கினைக் கொண்டு காலத்திற்கேற்ற வெற்றிகரமான செயற்றிட்டமாகும். சிறுவர் துஷ்பிரயோகத்தினைக் குறைத்து பெற்றோர்களுக்கு சலுகைக் கட்டண முறையொன்றினைப் பெற்றுக் கொடுத்தல் மூலம் நம்பிக்கைமிகு மற்றும் முறையான பாடசாலைப் போக்குவரத்துச் சேவையொன்றினை வழங்குவதன் மூலம் சமூக சேவையொன்றினை நிறைவேற்றுதல் இச்செயற்றிட்டத்தின் ஏனைய நோக்கங்களாகும்.

இதற்கு மேலதிகமாக, இலங்கையில் அநேகமான நகரங்களை அண்டிய பிரசித்தி பெற்ற பாடசாலைகளுக்கு நகரும் மாணவச் சமூகம் வருடாந்தம் படிப்படியாக அதிகரித்து வரும் போக்கு காரணமாக பிரதான பாதைகளில் சேரும் வேன் வண்டிகளின் தொகையும் படிப்படியாக அதிகரிக்கின்றது. இதன் விளைவாக காலை வேளையிலும் பகல் வேளையிலும் நகரத்தை அண்டிய பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெருக்கடிக்கு தீர்வாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் இப்பேருந்துச் சேவை செயற்றிட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்போது “சிசு செரிய” செயற்றிட்டத்தின் கீழ் குறைந்த பட்சம் 42 ஆசனங்களைக் கொண்ட பேருந்துகளை ஈடுபடுத்துவது காட்டாயமாவதுடன், சாதாரண பேருந்துககட்டணத்தின் 50% வீதம் மாணவர்களிடமிருந்து அறவிடப்படுவதுடன், இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான மற்றும் தனியார் துறையினருக்குச் சொந்தமான பேருந்துகள் மூலம் சேவைகள் பெற்றுக் கொள்ளப்படும். பேருந்து இயக்குனர்களின் இழக்கும் வருமானத்தின் பொருட்டு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஏற்கனவே இணங்கப்பட்ட கட்டண முறையின் படி பின்னர் மீள்நிரப்பி சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு பொதுத் திறைசேரியினால் பணம் ஒதுக்கப்படும். 2018.12.31ஆந் திகதியாகையில் ‘சிசு செரிய’ செயற்றிட்டத்தின் கீழ் ஈடுபடுத்தப்பட்டுள்ள 1418 பேருந்துகளின் காரணமாக நாளொன்றுக்கு (15 ஆசனங்கள் அளவிலான) ஏறக்குறைய 6000 பாடசாலை வேன் வண்டிகள் நகரத்திற்குள் வருவது தவிர்க்கப்பட்டுள்ளதுடன், நாளொன்றுக்கு 90,000இற்கும் அதிக எண்ணிக்கையிலான பாடசாலைச் சிறார்கள் சேவையினைப் பெற்றுக் கொள்கின்றனர். 2018ஆம் ஆண்டினுள் புதிய 56 சிசு செரிய சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது நபடு முழுதும் செயற்படுத்தப்படும் ‘சிசு செரிய’ சேவைகளின் எண்ணிக்கை மாகாண ரீதியாகக் கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| மாகாணம் | சிசு செரிய பேருந்துச் சேவைகளின் எண்ணிக்கை |
|---|---|
| மேல் | 431 |
| வடமேல் | 286 |
| வடமத்திய | 155 |
| தென் | 118 |
| சப்பிரகமுவா | 127 |
| ஊவா | 92 |
| கிழக்கு | 115 |
| மத்திய | 51 |
| வட | 36 |
| மாகாணங்களுக்கு இடையில் | 07 |
| **மொத்தம்** | 1418 |

மூலம்- திட்டமிடல் திணைக்களம், தேபோஆ




**மேல் வடமேல் அதன் சப்பிரகமுவா ஊவா கிடிக்கு**
**மத்திய வட மாகாணனுகளுக்கு இடையில**

சிசு செரிய சேவையினைத் தொடர்ந்தும் மேற்கொண்டுச் செல்வதற்கு ஒப்பந்தம் செய்துள்ள எல்லா சேவை வழங்குனர்களாலும் அச்சேவைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படுகின்றனவா எனத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரிகளால் அடிக்கடி பரிசீலனை செய்யப்படுவதுடன் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் முறைபாடுகள் தொடர்பிலும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஒப்பந்த நிபந்தனைகளை மீறுதல், அறிவிக்காமல் சேவையிலிருந்து விலகுதல் ஆகிய காரணங்களால் 27 பேருந்துச் சேவைகள் 2018ஆம் ஆண்டினுள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

2018ஆம் ஆண்டில் சிசு செரிய சேவையினை வழங்குவதற்கு பொதுத் திறைசேரியினால் 552.16 மில்லியன் ரூபா ஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அதில் 491.28 மி.ரூபா சேவை வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

## 1.2 கிராமிய பேருந்துச் சேவைச் செயற்றிட்டம் -“கெமி செரிய”



“கெமி செரிய” கிராமிய பேருந்துச் சேவை

‘கெமி செரிய’ என்பது பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் செயற்படுத்தப்படாத பாதைகளுக்கு மாத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நகரத்தை விட்டும் தூரத்தில் உள்ள, கிராமப்புறத்தில் வாழும் மக்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக 2005ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டமாகும். தற்காலத்தில் ‘போக்குவரத்து’ என்பது சமூகத்தில் எல்லா நடவடிக்கைகளிலும் முன்னால் வரும் அடிப்படைத் தேவையாக ஆகியிருப்பதுடன் உற்பத்தித் துறையில் போன்றே ஏனைய தொழில்துறவுகளுக்கும் அத்தியாவசிய அங்கமொன்றாக உள்ளது.

செயற்றிட்டத்திற்காகப் புதிய பாதைகளை அவ்வப்பிரதேசங்களில் உள்ள வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் முன்மொழியப்பட்டதன் பின்னர், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவனால் பயணிகள் கேள்வி தொடர்பில் மற்றும் சமூக ரீதியாகவும் அந்நிறுவனங்களுக்கு வழங்கவேண்டிய முக்கியத்துவம் குறித்து ஆய்வுகளை மேற்கொண்டு அப்போக்குவரத்துச் சேவையினை வழங்குவதன் மூலம் சமூக, பொருளாதார ரீதியில் உகந்த பயணிகள் கேள்வி இருப்பதாக உறுதிப்படுத்தப்படின், குறிப்பிட்ட அதிகார சபையுடன் இணைந்து திறந்த கேள்வி கோரல் முறைமையின் கீழ் ஓட்டுனர்கள் தெரிவு செய்யப்படுவர். மேலும், இப்பேருந்துகள் தொடர்ந்தும் ஓடுவது தொடர்பில் GPS தொழில்நுட்பத்தின் ஊடாக வழங்கல் மேற்கொள்ப்படுவதுடன், அந்த GPS இன் பிரகாரம் ஓடியது என உறுதிப்படுத்தப்படும் பயணத் தடவைகளுக்கு 1 கி.மீற்றருக்கு உடன்பட்ட தொகை (38 ரூபா) தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் உதவுதொகையாகச் செலுத்தப்படும்.

'கெமி செரிய' செயற்றிட்டத்திற்காக தனியார் துறையின் ஓட்னர்களை மாத்திரம் ஈடுபடுத்துவதுடன் ஆரம்பிக்கப்பட்ட நிலையான வருமானத்தினை உறுதிப்படுத்தும் வரை 03 ஆண்டுகள் வரை ஓட்டுனருக்கு உதவுதொகை வழங்கப்படும். 2018.12.31ஆந் திகதியாகையில் அறிமுகப்படுத்தப்பட்ட மொத்த 'கெமி செரிய' சேவைகளின் எண்ணிக்கை 55 ஆவதுடன், புதிய சேவைகளை ஆரம்பிப்பதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு எப்போதும் முயற்சியுடன் உள்ளது.

2018ஆம் ஆண்டில் புதிய 6 கெமி செரிய சேவைகளை ஆரம்பிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பினும் 3 சேவைகளை மாத்திமே செயற்படுத்த முடிந்தது. 2018ஆம் ஆண்டு இறுதியாகையில் உதவுதொகையினைப் பெற்றுக் கொண்டிருந்த 'கெமி செரிய' சேவைகளின் எண்ணிக்கை கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது. மாகாண போக்குவரத்து அதிகார சபையினால் கெமி செரிய சேவைக்கான பாதைகளைப் பரிந்துரைக்காமை இச்சேவையின் இலக்கினை நோக்கிச் செல்வதற்கு தடையாக இருந்ததுடன் அதற்கான அறிவுறுத்தல் 2018ஆம் ஆண்டினுள் மேற்கொள்கொள்ளப்பட்ட பேருந்து ஓட்டுனர் விழிப்பூட்டல் வேலைத்திட்டங்களின் போது மேற்கொள்ளப்பட்டது.

| மாகாணம் | கெமி செரிய பேருந்துச் சேவைகளின் எண்ணிக்கை |
|---|---|
| மத்திய | 02 |
| கிழக்கு | 02 |
| வடமேல் | 04 |
| **மொத்தம்** | **08** |

மூலம்- திட்டமிடல் திணைக்களம், தேபோஆ




2018 ஆம் ஆண்டினுள் கெமி செரிய சேவை வழங்கல் தொடர்பில் பொதுத் திறசேரியினால் ஒதுக்கப்பட்ட தொகை 8.8 மில்லியன் ரூபா என்பதுடன் உதவுதொகையாக மேற்கொள்ளப்பட்ட செலவு 2.74 மி. ரூபாவாகும்.

### 1.3 இரவு நேரப் பேருந்துச் சேவை செயற்றிட்டம் - "நிசி செரிய"

இலங்கையின் பல பிரதேசங்களில் உள்ள பொது மக்களுக்கு தொழில் மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்காக நேரகாலத்துடன் உரிய இடங்களுக்கு செல்ல முடியாமையினால் பெரும் அவஸ்தைக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது. பிரதான பாதைகள் தவிர்ந்த பல உட்பாதைகளில் இரவு வேளைகளில் மற்றும் அதிகாலையில் பேருந்துச் சேவைகள் தொடர்ந்தும் செயற்படாமையினால் இக்கவலைக்கிடமான நிலைமை உருவாகியுள்ளது. அதிகாலை மற்றும் இரவுப் பயணமுறைகளின் போது பேருந்துகளின் இயக்கத்தின் மூலம் போதியளவு வருமானமொன்று கிடைக்காமை இவ்வாறு ஓட்டுனர்கள் குறிப்பிட்ட பயணமுறைகளில் ஓடாமல் இருப்பதற்கு ஏதுவாகியுள்ளது. இப்பிரச்சினைக்குத் தீர்வாகவே போக்குவரத்து ஆணைக்குழுவினால் 2005ஆம் ஆண்டில் 'நிசி செரிய' பேருந்துச் சேவை செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது.



"நிசி செரிய" இரவு நேரப் பேருந்துச் சேவை

கடைசிப் பயணமுறை மற்றும் மறுநாள் அதிகாலையில் முதல் பயணமுறைக்காகப் பொதுப் பேருந்துச் சேவையினை ஈடுபடுத்தி பயணிகளின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்தல் செயற்றிட்டத்தின் அடிப்படை நோக்கமாவதுடன், அது வரையில் வாடகை வண்டிகளில் தமது பயணவசதியினை மேற்கொண்டு மற்றும் தற்காலிகமாக விடுதிகளில் தங்கியிருந்து தமது காரியங்களை நிறைவேற்றிக் கொண்ட மக்களுக்கு இச்சேவை கிடைத்தமை பெரும் ஆறுதலாக இருப்பதுடன் நம்பிக்கைமிகு சேவையொன்றாக நிறுவுவதற்கும் கண்காணிப்பு நடவடிக்கைகளை எளிதாக்குவதற்கும் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்துகள் மாத்திரம் ஈடுபடுத்தப்படுகின்றன. அதிவேகப் பாதையில் இரவுச் சேவைகளுக்கு மற்றும் இரவில் செயற்படும் புகையிரதச் சேவைகளுக்கும் இணைவாக இவ்விரவுப் பேருந்துச் சேவைகள் பல செயற்படுத்தப்படுகின்றன. 2018ஆம் ஆண்டினள் புதிய

43 'நிசி செரிய' சேவைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2018.12.31.ஆந் திகதியாகையில் செயற்படுத்தப்படும் 'நிசி செரிய' சேவைகளின் எண்ணிக்கை கீழ்வருமாறு.

| **மாகாணம்** | **நிசி செரிய பேருந்துச் சேவைகளின் எண்ணிக்கை** |
|---|---|
| மேல் | 62 |
| தென் | 33 |
| வட | 05 |
| வடமேல் | 20 |
| வடமத்திய | 11 |
| சப்பிரகமுவா | 03 |
| ஊவா | 09 |
| கிழக்கு | 03 |
| மத்திய | 27 |
| **மொத்தம்** | **173** |

மூலம்- திட்டமிடல் திணைக்களம், தேபோஆ




2018 ஆம் ஆண்டினுள் நிசி செரிய சேவைக்காகப் பொதுத் திறசேரியினால் ஒதுக்கப்பட்ட தொகை 21.027 மில்லியன் ரூபா என்பதுடன் மேற்கொள்ளப்பட்ட செலவு 12.02 மில்லியன் ரூபாவாகும்.

இச்சேவையினை செயற்படுத்தும் போது தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நடமாடும் பரிசோதனைப் பிரிவின் அலுவலர்களை ஈடுபடுத்தி அடிக்கடி கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படுவதுடன் எல்லா சேவைகளும் 100மு செயற்படுத்தப்படுவதற்கு தேவையான நடைமுறைகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. அவ்வாறே, சிற்சில சந்தர்ப்பங்களில் சேவை வழங்குனர்களின் குறித்து எழும் பிரச்சினைகள் மற்றும் சிக்கல்களை அவ்வப்போதே தீர்க்கப்பட்டு அனைவரினதும் அளப்பரிய அர்ப்பணிப்புடன் சிறந்த சேவையொன்று நிறைவேற்றப்படும்.

எதிர்காலத்தில் இச்சேவைகளை மென்மேலும் விஸ்தரிப்பதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பெரும் முயற்சியில் ஈடுபட்டிருப்பினும், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் மற்றும் சில மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபைகளின் அலுவலர்களிடமிருந்து கிடைக்கும் ஆதரவு திருப்திகரமான மட்டத்தில் இல்லாமையால் சவால்திக்கதாக உள்ளது.

## 2. பேருந்து ஊழியர் குழுவினரை பதிவுசெய்தலும் பயிற்சி அளித்தலும்




பயிற்சி நிகழ்ச்சியொன்றில் பங்குபற்றிய பேருந்து ஊழியர்களின் ஒரு பிரிவினர்

மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் போக்குவரத்துச் சேவையினைப் பயன்படுத்தும் பயணிகளுக்கு வினைத்திறன் மிக்க, விளைபயனுள்ள மற்றும் தரமிக்க உயர் சேவையினை வழங்கும் நோக்கினை நிறைவேற்றிக் கொள்வதற்காக 2006ஆம் ஆண்டு முதல் இது வரையில் தொடர்ச்சியாக சாரதிகள், பேருந்து நடத்துனர்கள் பயிற்சி நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2018ஆம் ஆண்டினுள் 598 புதிய பேருந்து நடத்துனர்கள் பயிற்சிக்காக அழைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுள் 350பேரும், 807 சாரதிகள் பயிற்சிக்காக அ ழைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுள் 620 பேரும் மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் போக்குவரத்துச் சேவைக்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் பயிற்சி பெற்று அடையாள அட்டைகளைப் பெற்றுள்ளனர்.

மீளாய்வாண்டினுள் 50 பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கான இலக்கு வழங்கப்பட்ட போதிலும், நிதி ஏற்பாடு இல்லாமையால் 46 பயிற்சி நிகழ்ச்சிகள் மாத்திரமே நடாத்தப்பட்டன. இதன்மூலம், 620 புதிய சாரதிகள் மற்றும் 350 பேருந்து நடத்துனர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளதுடன், 274 பேருக்கு மீண்டும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், சாரதிகள், பேருந்து நடத்துனர்கள் 1832 பேருக்கு இற்றைப்படுத்தும் பயிற்சி அளிக்கப்பட்டு அடையாள அட்டைகள் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன.

சாரதி அனுமதிப்பத்திரதாரிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் PT பயிற்சிக்காக 497 பேர் அழைக்கப்பட்டுள்ளதுடன், 05 பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு 216 பேருக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

| மாதம் | 201 8ஆண்டினுள் பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | புதிய | | புதுப்பிப்பித்தல் | | மீளப் பயிற்சி | | PT | |
| | சாரதிகள் | நடத்துனர்கள் | சாரதிகள் | நடத்துனர்கள் | சாரதிகள் | நடத்துனர்கள் | சாரதிகள் | |
| ஜனவரி | 78 | - | 109 | 90 | - | - | 38 | 315 |
| பெப்ரவரி | - | 35 | 50 | 83 | - | - | 57 | 225 |
| மார்ச் | - | - | 125 | 102 | 13 | 45 | - | 285 |
| ஏப்பிரல் | 72 | 27 | - | - | - | - | - | 99 |
| மே | 78 | - | 91 | 100 | - | - | 48 | 317 |
| ஜூன் | - | 35 | 115 | 171 | - | - | - | 321 |
| ஜூலை | 126 | 39 | 71 | 75 | 22 | 63 | - | 396 |
| ஆகஸ்ட் | - | 80 | 88 | 110 | - | - | 37 | 315 |
| செப்தெம்பர் | 80 | 22 | 84 | 85 | 37 | 33 | - | 341 |
| ஒக்தோபர் | 93 | 51 | 48 | 51 | 15 | 46 | 36 | 340 |
| நவம்பர் | 93 | 61 | 85 | 99 | - | - | - | 338 |
| திசெம்பர் | - | - | - | - | - | - | - | - |
| மொத்தம் | **620** | **350** | **866** | **966** | **87** | **187** | **216** | **3292** |

சரதிகள்/ பேருந்து நடத்துனர்கள் பயிற்சி நெறி - 2018




2018 திசெம்பர் 31ஆந் திகதியில் செயற்றிட்டத்திற்கான திரண்ட செலவு 4.83 மி.ரூபா ஆகும்.

# 3. தனியார் பேருந்துச் சேவைகளை மீளமைத்தல்

## 3.1 பேருந்துத் தரிப்பிடங்களை அமைத்தல்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் தொகுக்கப்பட்டுள்ள 'தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கை' 2017 இன் பிரகாரம் பொதுப் போக்குவரத்துச் சேவையின் துறைசார பங்களிப்பு வருடாந்தம் படிப்படியாக வீழ்ச்சியடைந்து, தனியார் போக்குவரத்து ஊடகங்களின் துறைசார் பங்களிப்பு அதற்கு நேர்மாறாக அதிகரித்துச் சென்றுள்ள விதம் நன்கு எடுத்துக்காட்டுவதுடன், பொதுப் போக்குவரத்துச் சேவையில் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளில் யாதாயினும் குறைபாடு அதற்கு தாக்கஞ் செலுத்தி இருப்பதாகத் தெரிகின்றது. அதனால், பயணிகள் போக்குவரத்தின்போது சௌகரியம மற்றும் வினைத்திறன் ஆகியவை நன்கு எதிர்பார்க்கப்படுகின்றன என்பது தெளிவாகுவதுடன், பெரும்பாலான மக்களைப் பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவையின் பால் ஈர்க்கும் சவால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு உள்ளது. அதனால், பொதுவாகப் பயணிகள் மற்றும் பேருந்து ஓட்டுனர்களின் வசதிகளுக்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் பேருந்துத் தரிப்பிடங்களை அமைத்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் செயற்றிட்டம் ஆரம்பிபக்கப்பட்டது.

அதன் படி, 2015ஆம் ஆண்டில் இலங்கை பொறியியற் கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்ட திட்டத்தின் படி மற்றும் அதன் முழுமையான மேற்பார்வையின் கீழ் கிண்ணியா நகரத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய பேருந்துத் தரிப்பிடம், 2017ஆம் ஆண்டு இறுதியாகையில் அனைத்து பணிகளும் முடிவடைந்து 2018 யூலை மாதம் 22ஆம் திகதி கௌரவ போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அவர்களால் மக்களிடம் கையளிக்கப்பட்டது.




கிண்ணியா புதிய பேருந்துத் தரிப்பிடம்

இதற்கு மேலதிகமாக அரச பொறியிலாளர் கூட்டுத்தாபனத்தின் நிர்மாணிப்பாக அமைக்கப்பட்டுள்ள ஹிங்குரக்கொடை மற்றும் மெதிரிகிரிய புதிய பேருந்துத் தரிப்பிடங்கள் இரண்டு பயணிக்கும் மக்களுக்கு மற்றும் ஓட்டுனர்களுக்கு தேவையான எல்லா வசதிகளும் அம்சங்களுடன் அனைத்து பணிகளும் நிறைவுற்று 2018.08.01ஆந் திகதி மாண்புமிகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள், கௌரவ போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அவர்கள் ஆகிய மதிப்பிற்குரிய அதிதிகளின் பங்களிப்புடன் மக்களுக்கு கையளிக்கப்பட்டன. ஹிங்குரக்கொடை பேருந்துத் தரிப்பிடத்தின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு 2018.08.31 ஆந் திகதி உரிய பிரதேச சபைக்கு பொறுப்புச் சாட்டப்பட்டதுடன் மெதிரிகிரிய பேருந்துத் தரிப்பிடத்தை ஒப்படைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.






ஹிங்குரக்கொடை புதிய பேருந்துத் தரிப்பிடம்





மெதிரிகிரிய புதிய பேருந்துத் தரிப்பிடம்

அதன் படி 2018ஆம் ஆண்டினுள் புதிய 3 பேருந்துத் தரிப்பிடங்கள் மக்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக கிளிநொச்சி நகரத்தில் கட்டப்பட்டு வரும் புதிய பேருந்துத் தரிப்பிடப் பணிகள் 2018.12.31ஆந் திகதியாகையில் 50% அளவு பணிகள் முடிவடைந்து இருப்பினும் ஒப்பந்தக்காரர்களின் திறமையின்மையால் இடைநடுவில் நிறுத்தப்பட்டு உள்ளது அதன் எதிர்கால வேலைகள் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

 

2018.12.31ஆந் திகதியில் பேருந்துத் தரிப்பிட நிர்மாணச் செயற்றிட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்தச் செலவு 36.72 மில்லியன் ரூபாவாகும்.

## 5. பேருந்துக் கட்டண ஒழுங்கீனங்களை நீக்குதல்

2002 ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட பேருந்துக் கட்டணக் கொள்கையின் சிபாரிசுக்கமைய பேருந்துக் கட்டண ஒழுங்கீனங்களை நீக்கும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

பேருந்துப் பயணிகள் பயணிக்கும் தூரத்திற்கு ஒப்பாகக் கட்டணமொன்றை அறவிடும் நோக்கில் மற்றும் கட்டண சந்தர்ப்பங்களை குறிப்பிட்ட நியமங்களின் கீழ் நிறுவும் நோக்குடன் பேருந்துக் கட்டணக் கொள்கை மூலம் கட்டணச் சந்தர்ப்பமொன்றிற்கான சாதாரண தூர அளவு பரிந்துரைக்கப்பட்டது. அதன்படி, தட்டையான தரை பாதையில் கட்டணச் சந்தர்ப்பமொன்றிற்கான சாதாரண தூரம் 2 கி.மீ. ஆகவும் மலைநாட்டுப் பாதையில் கட்டண சந்தர்ப்பமொன்றிற்கான சாதாரண தூரம் 1.7 கி.மீ. ஆகவும் நாட்டின் எல்லா பேருந்து பயணவழிகளும் அளவிடப்பட்டு கட்டணச் சந்தர்ப்பங்களை நிறுவுவதற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. அப்பரிந்துரையினைச் செயற்படுத்தும் நோக்கில் இச்செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2015ஆம் ஆண்டு இறுதியாகையில், மாகாணங்களுக்கு இடையிலான 400 பாதைகளும், மேல் மாகாணத்தில் 780 பாதைகளும் மத்திய மாகாணத்தில் 783 பாதைகளும் தென் மாகாணத்தில் 388 பாதைகளும் வடமேல் மாகாணத்தில் 366 பாதைகளும் சப்பிரகமுவா மாகாணத்தில் 574 பாதைகளும் ஊவா மாகாணத்தில் 480 பாதைகளும் அளவிடப்பட்டு தரப்படுத்தப்பட்ட கட்டணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. 2018இல் சப்பிரகமுவா மற்றும் ஊவா மாகாணங்கள் இரண்டிலும் பேருந்துக் கட்டண ஒழுங்கீனங்களைத் தீர்ப்பதற்கு இபோச மற்றும் மாகாணப் போக்குவரத்து அதிகாரசபை ஆகியவற்றுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

### பேருந்துக் கட்டணத் திருத்தங்கள் மற்றும் பேருந்துக் கட்டணக் கொள்கைத் திருத்தங்கள்

2001ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட 2002ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்படும் தற்போது செயற்படுத்தப்படும் பேருந்துக் கட்டண கொள்கையின் படி ஒவ்வொரு வருடமும் யூலை 01ஆந் திகதி பேருந்துக் கட்டணத் திருத்தம் தேசிய போக்குவரத்து ஆணைக்கழுவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

அதன் படி, 2018ஆம் ஆண்டில் மே மாதம் டீசல் விலை குறிப்பிடத்தக்களவு அதிகரித்தமையால் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சருடன் மற்றும் பேருந்து உரிமையாளர்களுடன்

கலந்துரையாடி 2018 யூலை 01ஆந் திகதி மேற்கொள்ளப்பட வேண்டிய வருடாந்த பேருந்துக் கட்டணத் திருத்தம் 2018 மே மாதம் 23ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டது. அதன் படி முதல் கட்டணச் சந்தர்ப்பமாக 12 ரூபா எனவும் மற்றும் ஏனைய கட்டணச் சந்தர்ப்பங்கள் 12.5% ஆல் அதிகரிக்குமாறும் அமைச்சரவை அனுமதியுடன் பேருந்துக் கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. அதன் பிறகு 2018.09.21 ஆந் திகதி முதல் 4%ஆல் பேருந்துக் கட்டணங்களை அதிகரித்தல் 2018.11.09 ஆந் திகதி முதல் 2%ஆல் பேருந்துக் கட்டணங்களைக் குறைத்தல் மற்றும் 2018.12.12ஆந் திகதி முதல் 4.2%ஆல் பேருந்துக் கட்டணங்களைக் குறைத்தல் மேற்கொள்ளப்பட்டதுடன் மேற்படி மூன்று சந்தர்ப்பங்களிலும் முதல் கட்டணச் சந்தர்ப்பமாக 12 ரூபாவாகப் பேணப்பட்டது.

தற்போது காணப்படும் பேரந்துக் கட்டணக் கொள்கையினைத் தயாரிப்பதற்கு அடிப்படையாகக் கொண்ட நிர்ணயங்களைத் தற்காலத்திற்குப் பொருந்தும் வகையில் திருத்தஞ் செய்யும் பொருட்டு 2017ஆம் ஆண்டு அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட புத்திஜீவிகளின் கமிட்டி 2018ஆம் ஆண்டினுள் பல முறை ஒன்று கூடி இக்கட்டணக் கொள்கை குறித்து கலந்தாலோசித்ததுடன், 2018ஆம் ஆண்டின் இறுதியாகையில் அக்கொள்கைத் திருத்தத்திற்காக வீதி ஆய்வுத் தரவுகளைச் சேகரிப்பதற்கு GPS உடனான கணினி நிகழ்ச்சி ஒன்றினைத் தயாரிப்பதற்கு விலைமனு கோரல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 2018 திசெம்பர் 31ஆந் திகதியில் 2.5 மில்லியன் ரூபா செலவொன்று இச்செயற்றிட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்டது.

## 5. போக்குவரத்துக் கொள்கையினை இற்றைப்படுத்தல்

2009.10.14ஆந் திகதி அமைச்சரவையினால் அனுதிக்கப்பட்டுள்ள 2018ஆம் ஆண்டாகையில் நடைமுறையில் காணப்பட்ட தேசிய போக்குவரத்துக் கொள்கை தற்காலப் பொருளதார, சமூகத் தேவைகள் மற்றும் போக்குவரத்துத் துறையின் நவீனமயப்படுத்தற் தேவைப்பாடுகள் அடிப்படையில் இற்றைப்படுத்தப்படல் வேண்டும் எனப் பாராளுமன்ற துறைசார் கண்காணிப்புக் கமிட்டியால் செய்யப்பட்ட பரிந்துரை மற்றும் வழிகாட்டிக்கு அமைய 2017ஆ் ஆண்டில் போக்குவரத்துக் கொள்கையினை இற்றைப்படுத்துவதற்கு புத்திஜீவிகள் கமிடடி ஒன்று நியமிக்கப்பட்டதுடன், அக்கமிட்டியால் வரையப்பட்ட தேசிய போக்குவரத்துக் கொள்கையினை சிங்கள மற்றும் தமில் மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்தல் மற்றும் அதனை மக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக சிங்கள, தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளியிடுதல் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டது. மக்கள் கருத்தினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் தயாரிக்கப்பட்ட போக்குவரத்துக் கொள்கை வரைவினைப் பாராளுமன்ற துறைசார் கண்காணிப்புக் கமிட்டிக்கு அனுப்புதல் 2018 யூன் மாதம் மேற்கொள்ளப்பட்டதுடன், அது வரை அனைத்து நடவடிக்கைகளும் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சுடன் இணைந்து தேசிய பொக்குவரத்து ஆணைக்குழுவிளால் மேற்கொள்ளப்பட்டன.

## 6. மட்டுப்படுத்தப்பட்ட நிறுத்தற் சமிக்ஞைப் பலகைகள் செயற்றிட்டம்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களின் கீழ் மற்றும் மாகாணப் போக்குவரத்து அதிகார சபைகளின் பயணிகள் சேவை அனுமதிபபத்திரங்களின் கீழ் இயங்கும் தூரப் பயண பேருந்துச் சேவைகளின் தரத்தினை விருத்தி செய்யும் நோக்கில் தேசிய

போக்குவரத்து ஆணைக்குழுவினால் தூரப் பயனச் சேவை பேருந்துகளுக்காக மட்டுப்படுத்தப்பட்ட நிறுத்தும் இடங்களை அறிமுகப்படுத்தும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 2018ஆம் ஆண்டினுள் இது தொடர்பில் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, இலங்கைப் போக்குவரத்துச் சபை, இலங்கைப் பொலிஸ் ஆகியவற்றுடன் பலமுறை கலந்தாலோசித்ததுடன், அக்கலந்துரையாடல்களின் விளைவாகத் தூரப் பயணச் சேவை பேருந்துகளை நிறுத்துவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட நிறுத்தற் சமிக்ஞைகளின் வர்த்தமானி அறிவித்தலுக்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## 7. போக்குவரத்திற்கு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சி

1991இன் இல.37 கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம் போக்குவரத்துச் சேவையின் தரத்தினையும் பாதுகாப்பினையும் முறைப்படுத்தும் அதிகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்குச் சாட்டப்பட்டுள்ளது. அதன் படி, போக்குவரத்துத் துறையுடன் சம்பந்தப்பட்ட தரப்பினரான பேருந்து உரிமையாளர்கள், மாகாண போக்குவரத்து அதிகார சபை ஊழியர்கள்உட்பட போக்குவரத்து தொடர்பிலான அலுவலர்கள், பாடசாலைச் சிறார்கள், பயணிகள் ஆகியோரை அவ்வத் தரப்பினருக்கு உரிய துறையினூடாக விழிப்பூட்டல் இச்றெயற்றிட்டத்தின் நோக்கமாகும்.

**<u>பேருந்து உரிமையாளர்களை அறிவுறுத்தும் செயலமர்வு</u>**

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுள்ள பேருந்து உரிமையாளர்களுக்கும் மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கும் இடையில் நிரந்தரமான ஒத்துழைப்பினை பேணவேண்டியதால் மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் அவ்வப்போது அமுல்படுத்தப்படும் விதிக்கப்படும் சட்டதிட்டங்கள் குறித்து பேருந்து உரிமையாளர்களை அறிவுறுத்துவதற்காக கிழக்கு, சப்பிரகமுவா, வடமேல், ஊவா, வடமத்திய, கண்டி, மேல் மாகாணங்களுக்கான 07 செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.





## போக்குவரத்துடன் சம்பந்தப்பட்ட அலுவலர்களை விழிப்பூட்டும் செயலமர்வு

போக்குவரத்துடன் சம்பந்தப்பட்ட அதிகாரம் பெற்ற நிறுவனங்களின் அலுவலர்களின் அறிவை இற்றைப்படுத்துதல் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கடமை என்பதால் அம்மாகாண போக்குவரத்து அதிகார சபைகளில் பணிபுரியும் பொறுப்புவாய்ந்த அலுவலர்கள் போக்குவரத்துத் தொடர்பில் விரிவுரைகள் மற்றும் நிறுவனமொன்றின் செயற்படு திட்டம், கூட்டிணைந்த திட்டம், வருடாந்த வரவுசெலவுத் திட்ட ஆவணங்களைத் யதாரித்தல், ஆளுமை விருத்தி ஆகிய தலைப்புக்களின் கீழ் அறிவைப் பெற்றுக் கொடுப்பதற்கு இச்செயலமர்வு ஒழுங்கு செய்யப்பட்டது.




செயலமர்வில் கலந்துகொண்ட அலுவலர்களில் ஒரு பிரிவினர்

## பாடசாலை சிறார்களை விழிப்பூட்டும் செயலமர்வு

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் வருடாந்தம் தொகுக்கப்படும் ‘2017 தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கை’யின் படி கடந்த 3 வருடங்களில் இலங்கையில் ஏற்பட்ட வீதி விபத்துக்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்துச் சென்றுள்ளமை தெளிவாகின்றது. அதன் பிரகாரம் ஏற்படும் வீதி விபத்துக்களால் இறப்போரும் மற்றும் காயத்திற்குள்ளாகுவோரும் அதிகரிக்கின்றனர். நாள்தோறும் ஏற்படும் வீதி விபத்துக்கள் பல கவனயீனமாக வாகனத்தை ஓட்டுதல் மற்றும் கவனயீனமான வீதிப் பாவனை காரணமாக ஏற்படுவதால் பாடசாலைப் பருவத்தில் உள்ள சிறார்களை சிறு பிராயம் முதலே சரியான, பாதுகாப்பான முறையில் சுயபுத்தியுடன் வீதியினைப் பயன்படுத்தவதற்கும் வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்கும் வலுவூட்டுவது காலத்தின் தேவையாகும். அதனால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு எதிர்கால இளஞ் சந்ததியினரதும் நாடு முழுவதினதும் மேம்பாட்டையும் நோக்காகக் கொண்டு செயலமர்வுத் தொடரொன்று ஒழுங்கு செய்யப்பட்டது.

அதன் படி, ஏறக்குறைய பத்தாயிரத்திற்கும் அதிகமான பாடசாலைகள் இருப்பதால் எல்லா பாடசாலைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் படி எல்லா பாடசாலைகளிலும் வாகனக் கட்டுப்பாட்டுக் குழுவினரை அறிவுறுத்தவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், வலய மட்டத்தில் பாடசாலைகளைத் தெரிவு செய்து வாகனக் கட்டுப்பாட்டுக் குழுவினரை அறிவுறுத்தல் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. செயலமர்வின் இறுதியில் பாடசாலைகளுக்கான வாகனக்

கட்டுப்பாட்டுக் கருவிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டதுடன், பிள்ளைகளுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

2018ஆம் ஆண்டில் பாடசாலை வாகனக் கட்டுப்பாட்டுப் பிளளைகளைப் பயிற்றுவிக்கும் 21 செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. இச்செயலமர்வுகள் பேண்தகு பாடசாலைகள் செயற்றிட்டத்தின் கீழ் நடாத்தப்பட்டதுடன், செயலமர்வுகளை நடாத்துவதற்கு ஜனாதிபதி செயலகத்தினாலும் நிதி ஏற்பாடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. அதன் படி, வலபனே, ஹம்பாந்தோட்டை, தங்காலை, அக்குரஸ்ஸ, மாத்தறை, காலி, கொழும்பு, ஹொறணை, இரத்தினபுரி, பலாங்கொடை, மாவனல்லை, கேகாலை, தெஹிஓவிட்ட, கம்பஹ, களுத்துறை, மத்துகமை, கநதளாய், திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் நடாத்தப்பட்டன. இச்செயலமர்வுகளின் போது ஏறத்தாழ 10000 வாகனக் கட்டுப்பாட்டுப் பிள்ளைகள் பயிற்றுவிக்கப்பட்டதுடன், எல்லா பாடசாலைகளுக்கும் ஒரு வாகனக் கட்டுப்பாட்டுக் கருவி வீதம் அன்பளிப்புச் செய்யப்பட்டது. அவ்வனபளிப்பிற்காகப் பீப்பள்ஸ் லீசிங் நிறுவனம் மற்றும் பெயா பஸ்ட் நிறுவனம் அனுசரணை வழங்கின.





செயலமர்வில் கலந்துகொண்ட பாடசாலை சிறார்களில் ஒரு பிரிவினர்

2018ஆம் ஆண்டினுள் இதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு 6.12 மில்லியன் ரூபாவாகும்.

## 8. உள்ளகத் தகவல்கள் தொழில்நுட்பத் தொகுதி

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பிரதான மற்றும் உப அலுவலகக் கணினி வலையமைப்பை சிறந்த மட்டத்தில் பேணுதல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதுடன், காலாவதியாகிய கணினிகள் மற்றும் அச்சு இயந்திரங்களுக்கு புதிய கணினிகளையும் பல் செயற்பாடுகள் கொண்ட பிரதியிடல் இயந்திரங்களையும் பயன்படுத்தவதற்கு நேரிட்டது.

மேலும் நீண்ட காலமாக நிறுவனத்தினுள் செயற்படுத்தவதற:கு முயற்சி செய்த தரவு அடிப்படைத் தொகுதி மூலம் எல்லா திணைக்களங்களையும் நன்கு ஒருங்கிணைப்பதற்கு இவ்வருடத்தினுள் ஆரம்பிக்க அதாவது நிறுவனத்தினுள் நடைபெறும் எல்லா செயற்பாடுகளையும் இனங்கண்டு அச்செயற்பாடுகள் ஒன்றையொன்று இணையுமாறு மையப்படுத்தப்பட்ட தரவுகளை அடிப்படையாகக்

கொண்ட தொகுதியொன்றினை அமைக்கும் நோக்கில் நிறுவனத்தின் அனைத்து செயற்பாட்டினையும் தானியங்கச் செய்யும் தொகுதியொன்றினை நிறுவுதல் (Process Automation System) என்பன ஏற்கனவே ICTA நிறுவனம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம் மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் அறுவுத்தல்களின் கீழ் அரம்பிக்கப்பட்டு இது வரையில் அதன் முதல் கட்டத்தினை வெற்றிகரமாக நிறைவு செய்து அதன் நேரலை செயற்பாட்டு நடவடிக்கைகள் (Live Operation) மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவ்வாறே, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வலைத்தளத்தில் காணப்படும் தகவல்களை இற்றைப்படுத்தல் மற்றும் புதிய தகவல்களை உட்புகுத்துதலையும் தேடுதலையும் எளிதாக்கும் முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், பேருந்துக் கட்டணம் குறித்து தரவுகள், மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து நேர அட்டவணைகள், மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகளின் இயங்கும் பாதைகளின் வரைபடங்கள், பயணிகள் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரம் தொடர்பில் கேள்விமனு குறித்து தகவல்கள் உட்பட்டவற்றை வலைத்தளத்தினூடாக எளிதாகப் பெற்றுக் கொள்ளும் வகையில் வலைத்தளத்தை மேலும் முன்னேற்றுதல் என்பன புதிய அணுகுமுறைகளுடன் புது விதத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பெஸ்ரியன் மாவத்தை பேருந்துத் தரிப்பிட வளவில் பொருத்தப்பட்டுள்ள CCTV கெமரா தொகுதி உரிய விதத்தில் செயற்படாமையால், அதற்கான புதிய தொழில்நுட்பத்தைக் கொண்ட CCTV கெமரா தொகுதி ஒன்று குறிப்பிட்ட பேருந்துத் தரிப்பிடத்தினை உள்ளடக்குமாறு மற்றும் வவுனியா பேருந்துத் தரிப்பிடத்தினையும் உள்ளடக்குமாறு பொருத்தப்படுவது வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. மேலும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைமை அலுவலக வளாகத்திலும் CCTV கெமரா தொகுதி ஒன்று பொருத்தப்பட்டு உள்ளதுடன் மேற்படி தொகுதிகள் தலைமை அலுவலகத்தின் ஊடாகக் கண்காணிப்புச் செய்யப்படும்.

இதற்கு மேலதிகமாக, பயணிக்கும் மக்களுக்கு தரமிக்க போக்குவரத்துச் சேவையொன்றினை வழங்கும் நோக்கில் இணையத்தளத்தினூடாக (இடையறா) ஆசனங்களை முன்பதிவுசெய்தல் செயற்றிட்டமொன்று (Online Bus Ticket Reservation System) மொறட்டுவைப் பல்கலைக்கழத்தின் மூலம் உரிய மென்பொருள் விருத்தி செய்யப்பட்டு ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## 9. போக்குவரத்துக் கேள்வி மற்றும் சேவை தர ஆய்வு

இதன் கீழ், பிரதானமாக மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து இயக்கத்திற்கு உரிய பயணிகள் கேள்வி ஆய்வு மேற்கொள்ளப்படுவதுடன் அதன் மூலம் வழங்கப்படும் சரியான தரவுகள் முறையான அட்டவணைகளைத் தயாரிப்பதற்கும் எழும் பிரச்சினைகளைத் குறைத்துக் கொள்வதற்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும். இதற்கு மேலதிகமாக மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் போக்குவரத்து தொடர்பில் முக்கியமான தீர்மானங்களை எடுக்கும் போது, கொள்கைகளைத் தயாரிக்கும் போது, திட்டங்களைத் தீட்டும் போது காணப்படும் நிலைமையினை

ஆராயும் சந்தரப்பத்தில் தேவையான தரவுகளை வழங்குவது ஆய்வு அலகினால் மேற்கொள்ளப்படும். அதன் படி பொதுப் போக்குவரத்துச் சேவைகளைப் பயன்படுத்துவோர் மற்றும் பேருந்து ஓட்டுனர்கள் ஆகிய இரு தரப்பினர்களுக்கும் நியாயமான முறையில் கேள்வி மற்றும் நிரம்பலை மிகச் சிறப்பாகக் கையாள்வதற்கு தேவையான வழிமுறைகளை மேற்கொள்வதற்கும் உரிய தரவுகளைத் தொகுத்தல் ஆய்வு அலகின் முக்கியமான பணியாகும்.

2018 ஆகஸ்ட் மாதம் இறுதியாகையில் 22 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், பயணிகள் கேள்வி தொடர்பில் பிரதானமாக கவனஞ் செலுத்தப்பட்டது.

பெரு நகர் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் நீர்கொழும்பு 18ம் மைல்கல், பல் பரிமாற்ற நிலையத்தில் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், அதன் படி நீர்கொழும்பு 18ம் மைல்கல்லை அண்டிய பிரதேசத்தினுள் பயணிகள் கேள்வி குறித்து மதிப்பீட்டு ஆய்வொன்றினை மேற்கொள்ளுமாறு பெரு நகர் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் கோரப்பட்ட வேண்டுதலின் பிரகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் அம்மதிப்பீடுட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டதுடன், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு ஆலோசகர் கட்டணமாக 1,478,250,00 ரூபா தொகையொன்றினை ஈட்டிக் கொள்ள முடிந்தது.




கிழக்கு மாகாணத்தில்
தொப்பிகல பிரதேசத்தில் கெமி செரியவிற்காக ஆய்வொன்றினை மேற்கொண்ட சந்தர்ப்பம்

## 10. பொதுப் போக்குவரத்திற்காக ஜீ.பீ.எஸ். (GPS) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்

பொதுப் போக்குவரத்துச் சேவையில் எழும் சவால்மிக்க பிரச்சினைகளைத் தீர்ப்பதனை அடிப்படையாகக் கொண்டு தரமிக்க மற்றும் பாதுகாப்புமிக்க பொதுப் போக்குவரத்துச் சேவையொன்றினை நிலைநிறுத்துவதற்காக தொடர்பாடல் தொழில்நுட்பத்தினைப் பொதுப்

போக்குவரத்துச் சேவையில் பிரயோகிக்கும் வகையில் ஜீ.பீ.எஸ். தொழில்நுட்பம் (GPS Technology) மற்றும் ஏனைய தொழில்நுட்ப நுணுக்கங்களைப் பிரயோகித்து மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகளை நெறிப்படுத்துதல் முதன்முதலாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்டது.




ஜீ.பீ.எஸ். நெறியாள்கை

இச்செயற்றிட்டத்தின் கீழ், 2017ஆம் ஆண்டினுள் ஜீ.பீ.எஸ். ஊபகரணங்கள் செயலிழந்து காணப்பட்ட பேருந்துகளை மீண்டும் செயற்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு உரிய முறைமைகள் மீள் ஒழுங்கமைக்கப்பட்டது. அதன் படி, எல்லா பேருந்துகளிலும் ஜீ.பீ.எஸ். ஊபகரணங்களைப் பொருத்துதல் மற்றும் செயலிழந்த உபகரணங்களை மீண்டும் செயற்படும் நிலைமைக்கு கொண்டு வரல் உரிய பேருந்து உரிமையாளரின் பொறுப்பு என அனுமதிப்பத்திர நிபந்தனைகள் அமுலாக்கப்பட்டதுடன் 2018 ஆம ஆண்டில் எல்லா சொகுசு மற்றும் அதி சொகுசு பேருந்துகளில் ஜீபிஎஸ் உபகரணங்கள் செயற்படும் நிலைக்கு கொண்டு வரப்பட்டன.

மேலும்,மாகாணங்களுக்கு இடையிலான சாதாரண மற்றும் அரை சொகுசு சேவைகளுக்கும் ஜீ.பீ.எஸ். தோழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், அச்சேவைகளிலும் ஜீ.பீ.எஸ். உபகரணங்களைப் பொருத்துதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அவ்வாறே புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய நெறியாள்கைக் கூடத்தின் ஊடாக ஜீபிஎஸ்உபகரணம் பொருத்தப்பட்டுள்ள பேருந்துகளை நெறிப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வுபகரணத் தொகுதி பயணிக்கும் பேருந்துகளில் வேகத்தினைக் கட்டுப்படுத்தி எச்சரிக்கை சமிக்ஞை ஒன்று பேருந்தினுள் ஒலிப்பதுடன் அதற்கு இணைவாக காட்டுப்பாட்டு அறையில் அது தொடர்பில் குறிக்கப்படுவதாலும் இது வரையில் ஜீ.பி.எஸ். தொழில்நுட்பம் பொருத்தப்பட்டுள்ள பல பேருந்துகள் கூடிய வேகத்துடன் செல்வதைக் கட்டுப்படுத்தியுள்ளன. இதற்கு மேலதிகமாக பொது மக்கள் முறைப்பாடுகள் அலகுடன் இணைக்கப்பட்டுள்ள துரித தொலைபேசி அழைப்புப் பிரிவிற்கு கிடைக்கும் முறைப்பாடுகளை உடனடியாகத் தீர்ப்பதற்கும் அதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் முடியுமாயுள்ளது.

மேலும்,ஜீ.பீ.எஸ். உபகரணங்கள் பொருத்தப்பட்ட பேருந்துகளின் இயக்க நிலைமைகள் குறித்து தகவல்கள் ஓட்டுனர்களுக்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் உயர் அதிகாரிகளுக்கும் அறிவூட்டும் நோக்கில் குறுஞ்செய்தி சேவையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், பேருந்துகள்

இயங்கும் இடங்கள் குறித்து தகவல்களை பயணிக்கும் மக்களுக்கு அறிவுறுத்துவதற்கு 1955 துரித அழைப்பு இலக்கமொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்காக 2018ஆம் ஆண்டினுள் 3.19 மி. ரூபா திரண்ட செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 11. பேருந்துகளைப் பௌதிக ரீதியில் பரிசோதனை செய்தல்

இலங்கையில் பயணிகள் போக்குவர்து தொடர்பில் பல பிரச்சினைகளை உருவாக்கியவாறு பயணிகள் பொதுப் பயணிகள் சேவையினை மறுத்தவாறு தனியார் போக்குவரத்து ஊடகங்களைப் பயன்படுத்துவதற்குத் தூண்டப்படும் போக்கு தெளிவாகக் கணப்படுவதுடன், இதற்காக பேருந்துச சேவைகளில் உள்ள குறைபாடுகள், பலவீனங்கள் மற்றும் வினைத்திறனற்ற தன்மை என்பன செல்வாக்குச் செலுத்தியுள்ளன. அதனால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மாகாணங்களுக்கு இடையிலான தூரப் பயண சேவைப் பேருந்துகளை விசேடமாகப் பயணிகளுக்கு உடல் மற்றும் உள அசௌகரியங்கள் இன்றி குறிப்பிட்ட நேரத்தில் பயண முடிவிற்குப் போவதற்கு முடியுமான வசதிகளுடன் செயற்படுத்தவதற்கு பெரு முயற்சியினை மேற்கொள்கின்றது. அதன் பிரகாரம், அப்பேருந்துகளின் தகுதி குறித்து கூடிய கவனஞ் செலுத்துவதுடன், பயணிகளின் பாதுகாப்பையும் சௌகரியத்தையும் உறுதிப்படுத்தும் நோக்கில், அனுமதிப்பத்திரமொன்றினை வழங்குவதற்கு முதல் பேருந்துகளில் ஒவ்வொரு சேவை வகைக்கு ஏற்ற விதத்தில் இருக்க வேண்டிய விடயங்கள் குறித்து முழுமையான பரிசீலினை செய்யப்படும். அதன் படி, பேருந்துகளின் உள்ளே மற்றும் வெளியே ஒலி மட்டம் (noise level), மிதிபலகைகள், கதவுகள், அவசரக் கதவுகள் என்பன உரிய முறையில் செயற்படுகின்றனவா எனவும், ஆசனங்களின் நீளம், அகலம், உயரம் மற்றும் ஆசனங்களுக்கு இடையிலான இடைவெளி என்பன உரிய நிபந்தனைகளுக்கு இணங்க இருக்கின்றனவா எனவும், பேருந்தினுள் சுத்தம் சிறந்த முறைகயில் பேணப்படுகின்றதா எனவும், மணித் தொகுதி, பிரதான விளக்கு, சமிக்ஞை விளக்குகள் என்பன உரிய முறையில் செயற்படுகின்றனவா எனவும் பேருந்தில் எல்லா பௌதிக நிலைமைகளையும் பரிசீலித்து அறிக்கை வழங்கப்படும். பயணிகள் போக்குவரத்திற்காக ஈடுபடுத்த முன்வைக்கப்படும் எல்லா பேருந்துகளுக்கும் இவ்வறிக்கையினைப் பெற்று முன்வைப்பது கட்டாயமாகும்.
அதன் படி,மாகாணங்களுக்கு இடையிலான புதிய பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம் வழங்கும் போது மற்றும் பயணிப்பதிலிருந்து அகற்றப்பட்ட பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகளைப் பதிலீடு செய்யும் போது, இவ்வறிக்கையில் அடங்கியுள்ள விடயங்களைக் கருத்திற் கொண்டு, உரிய வழங்கல் குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

## 12. மாகாணங்களுக்கிடையிலான பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்குதல்

இலங்கையில் பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவையினை மேம்படுத்தவதற்கு பாரிய பொறுப்பொன்றினை நிறைவேற்றி, மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பேருந்துப்பயணிகள் போக்குவரத்துச் சேவை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் நெறிப்படுத்தப்படுவதுடன், மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பேருந்துச் சேவைகளை சிறந்த மட்டத்தில்

மேற்கொள்வதற்கு வேண்டிய ஒழுங்குவிதிகளை தயாரிப்பதும் பயணிகள் போக்குரவத்து அனுமதிப்பத்திரங்களை வழங்குதலும் மேற்கொள்ளப்படுகின்றது. மாகாணங்களுக்கு இடையிலான பாதைகளில் பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவைகளில் உட்புகும் பேருந்துகளுக்கு பயணிகள் போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் விலைமனு கோரல் படிமுறைகளின் படி மேற்கொள்ளப்படுவதுடன், அம்முறைமையினைப் பயன்படுத்துவதன் மூலம் உச்ச நம்பிக்கையும் வெளிப்படைத்தன்மையும் புலப்படுமாறு உரிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துச் சேவை 4 சேவை வகைகளைக் கொண்டுள்ளதுடன், 2017.12.31ஆந் திகதியாகையில் அவ்வச் சேவை வகைக்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| சேவை வகை | பயணிகள் சேவை அனுமதிப்பத்திர (பேருந்துகளின்) எண்ணிக்கை |
|---|---|
| சாதாரண | 2001 |
| அரை சொகுசு | 435 |
| சொகுசு | 601 |
| அதி சொகுசு | 113 |
| மொத்தம் | **3150** |

மூலம்- இயக்குதல் மற்றும் சேவைகள் கண்காணிப்புத் திணைக்களம், தேபோஆ




தேபோஆவினால் செயற்படுத்தப்படும் பேருந்துச் சேவை வகைகள்

## 13. பொதுமக்கள் முறைபாடுகள்

பொதுப் பேருந்துச் சேவையினைப் பயன்படுத்தும் பயணிகளுக்கு நம்பிக்கைமிகு, பாதுகாப்புமிகு மற்றும் சௌகரியமிகு சேவையொன்றினைப் பெற்றுக் கொடுத்தல் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஒரே நோக்கமெனினும் எதிர்பார்க்கப்பட்ட சௌகரியமிக்க சேவைக்குப் பதிலாக

பயணிக்கும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனவே,நாள் முழுதும் 24 மணி நேரமும் செயற்படும் விசேட குறி இலக்கம் ஒன்றும் (1955) துரித தொலைபேசி அழைப்பு இலக்கம் ஒன்றும் (0112595555) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக கீழ் கண்டவாறு பொது மக்கள் முறைபாட்டு அலகுகளுக்கு முறைபாடுகள் கிடைக்கப் பெறுகின்றன.

- எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்படும் முறைபாடுகள்
- வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை ஊடாக
- பெஸ்ரியன் மாவத்தை அலுவலகம் ஊடாக
- இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊடாக
- ஜனாதிபதியிடம் கூறுங்கள் நிகழ்ச்சி ஊடாக
- மின் அஞ்சல் info@ntc.gov.lk ஊடாக
- பெக்ஸ் ஊடாக



பொது மக்கள் முறைபாட்டினை விசாரணை செய்யும் சந்தர்ப்பமொன்று

மூலம் - தரக் கட்டுப்பாடு மற்றும் வெளி உறவுகள் திணைக்களம் -தேபோஆ

பொது மக்கள் முறைப்பாட்டு அலகிற்கு கிடைகதும் முக்கியமான முறைபாடுகள் வகைப்படுத்தப்பட்

கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு கிடைக்கப் பெறும் மக்கள் முறைபாடுகளுள்,

| தொ. இல. | விபரம் | குறியீட்டு இல. | முறைபாடுகளின் எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|---|---|
| 1 | அதிகரித்த கட்டண அறவீடு/மீதிப் பணத்தைக் கொடுக்காமை | SE02 | 1010 | 26% |
| 2 | பிரயாணிகளுடன் முரட்டுத்தனமாக நடந்து கொள்ளுதல் | SE05 | 975 | 25% |
| 3 | அளவுக்கு அதிகமான பிரயாணிகளை ஏற்றுதல் | MJ09 | 172 | 4% |
| 4 | முறையாகப் பயணச்சீட்டுக்களை வழங்காமை | MJ06 | 373 | 10% |
| 5 | கவனயீனமாக வண்டியை ஓட்டுதல் | MJ11 | 425 | 11% |
| 6 | வீதி அனுமதிப்பத்திரமின்றி ஓட்டுதல் | MJ05 | 16 | 0% |
| 7 | இடைப்பட்ட இடங்களில் தேவையின்றி பேருந்தினை நிறுத்தி பயணிகளை ஏற்றுதல் | PC02 | 124 | 3% |
| 8 | குறிக்கப்பட்ட நேர அட்டவணையை மீறுதல் | MJ02 | 276 | 7% |
திரண்ட மிகை/பற்றாக்குறை 410,467,930.63 ரூபாவில் இருந்து 419,015,473.72 ரூபா வரை அதிகரிக்க இச்சரிப்படுத்தல்கள் ஏதுவாகின.

அடைப்புக்குறிக்குள் இருக்கும் எண்கள் கழித்தல்கள் ஆகும்.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் தொடரும்...

# கணக்காய்வளர் தலைமை அதிபதியின் அறிக்கை

**தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் அதன் நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ்,கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர, ஆணைக்குழுவின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றவாறு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு, எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள

அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். ஆணைக்குழுவைக் கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பொறுப்பு குறிப்பிட்ட தரப்பினரதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய

அறிக்கையை வழங்குவது என்பன எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலொன்றாக இருப்பினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களுக்கு தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும்போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளலும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். தவறினால் ஏற்படும் தாக்கங்களினை விட மோசடிகளை இனங்காணாமையால் ஏற்படும் போதியளவு தவறான கூற்றுக்களை இனங்காணாமையால் ஏற்படும் தாக்கம் பிரபலமானதாகும். தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டைப் புறக்கணித்தல் என்பன மோசடி ஏற்படக் காரணமாகலாம்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டை அறிந்திருந்தபோதும் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மைக்கான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்குக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மையையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக மன்றம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

இயலுமானவரை மற்றும் தேவையான எச் சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு பரப்பெல்லையும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்குமிடத்து, ஆணைக்குழுவின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்யக்கூடியவாறு அதன் ஒழுங்கமைப்பு, முறைமை, நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமை, நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகப் பேணப்பட்டுள்ளனவா என்றும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாட்டிற்கு இணங்க ஆணைக்குழு செயற்பட்டுள்ளதா என்றும்,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றும்,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் கால வரம்பிற்குள்ளும் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்றும்,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களது முகாமைத்துவத்தினை பொதுவான மற்றும் குறிப்பிடப்பட்ட அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், தொடர்புடைய அறிக்கையிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு தேவையான்வாறு கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கீட்டு நடவடிக்கைகளைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களில் பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களித்தகைமையை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் கணக்கிணக்கம் செய்தல் மற்றும் வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல் தொடர்பான நியாயமான உறுதிப்பாட்டை பெறுவதற்குப் போதிய “சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட” உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையை நிறுவகம் பேணுதல் அவசியமாகும்.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிளிநொச்சி பஸ் தரிப்பிட நிர்மாண வேலை சம்பந்தமான உடன்படிக்கை மீறலால் உடன்படிக்கைப் பிரகாரம் ஒப்பந்தத்தை மேற்கொள்வதை இடைநிறுத்தி ஆணைக்குழுவானது ரூபா 4,869,212 கேள்விக்கான பிணைப் பணத்தையும் ரூபா 2,438,700 செயலாற்றல் பிணைமுறித் தொகையையும் அறவீடு செய்திருந்தது. இதனை நடைபெறும் வேலைப் பெறுமதியிலிருந்து கழித்துக் | குறித்த விடயம் தொடர்பாக அச்சமயம் தெளிவான தீர்மானம் இல்லாதிருந்ததால் இக் கேள்விக்காக பிணைத்தொகை வருமானமாக கணக்கிலிடப் படவில்லை. | கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதியையும் நடைபெறும் வேலைப் பெறுமதியையும் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

கொள்ளாது ஒப்பந்தகாரருக்குக் கொடுப்பனவு செய்யா வேண்டிய தொகையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக, மீளாய்வாண்டின் இறுதியில் நடைபெறும் வேலையும் கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதியும் நடைபெறும் வேலையும் ரூபா 7,334,912 அதிகரிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

### 1.5.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் | | | |
| (i) 10(5) ஆம் பிரிவு | ஆணைக்குழுவினது ஒவ்வொரு ஆண்டின் இறுதியில் உள்ளவாறான நிகர மிகை வருமானத்தில் எஞ்சும் சகல தொகையும் திரட்டு நிதியில் செலவு வைக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2018 ஆம் ஆண்டில் ரூபா 165,284,562 மிகை ஏற்பட்டிருந்த போதிலும், ரூபா | 2017 ஆம் ஆண்டில் ரூபா 300 மில்லியன் மற்றும் 2018 ஆம் ஆண்டில் ரூபா 100 மில்லியன் என பொதுத் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ரூபா 165,284,562 மிகை நிதிசார் மிகை அல்ல. | நிதிக்கூற்றுக்களில் காணப்படும் நிதிசார் மிகையில் ஆணைக்குழுவினது எதிர்கால தொழிற்படு மூலதனத் தொகைக்கு மதிப்பிடப்படும் தொகை கழித்துக் கொள்ளப்பட்டு எஞ்சும் தொகையை திரட்டு நிதியில் செலவு வைக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 100,000,000 மாத்திரமே திரட்டு நிதியில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | 11 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பிரிவு | மிகையாக உள்ளவற்றை முதலீடு செய்கையில் நிதி அமைச்சரின் இணக்கமும் குறித்த அமைச்சரது அங்கீகாரமும் பெறப்பட வேண்டுமாயினும், அவ்வாறு அங்கீகாரம் பெறப்படாது பணிப்பாளர் சபையினது அங்கீகாரத்துடன் ஆணைக்குழுவானது நிலையான வைப்புகளிலும் திறைசேரி உண்டியல்களிலும் முதலீடுகளை மேற்கொண்டிருந்தது. 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு இருந்த முதலீட்டு மீதி ரூபா 6,780,452 ஆகும். | திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது. இதுவரை அதற்குப் பதில் கிடைக்கவில்லை. | முறையாக அங்கீகாரத்தைப் பெற்று முதலீட்டை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1991 ஆம் ஆண்டின்37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 08 ஆம் பிரிவு | பயணிகளின் கோரிக்கைகளை இனங்கண்டு வீதிச் சேவை அனுமதிப் பத்திரங்களை வழங்க வேண்டுமாயினும், அதிவேகப் பாதை | கேள்வி நடைமுறை தற்போது மீளாய்வு செய்யப்பட்ட வாறுள்ளது. | பயணிகளது கோரிக்கைகளை இனங்கண்டு வீதிச் சேவை அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட வேண்டும். |

மாத்திரமே பரிசீலனைக் குள்ளாகியிருந்தது. கடவத்தையில் பயணத்தை ஆரம்பித்து தங்காலை, ஹக்மனை, கதிர்காமம், தெனியாய, எம்பிலிபிட்டிய வீதிகளில் பஸ் வண்டிகளைப் பயன்படுத்த வேண்டுமென இனங்கண்டு கொள்ளப்பட்டிருந்த போதும், அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

## 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டினது செயற்பாட்டு பெறுபேறு ரூபா 165,284,562 மிகை ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டினது மிகை ரூபா 169,437,153 ஆகும். அதற்கமைய நிதிப் பெறுபேற்றில் ரூபா 4,152,591 நலிவு அவதானிக்கப்பட்டது. வீதி அனுமதிப்பத்திர கேள்விகளுக்கான வருமானம் ரூபா 35,731,952 குறைவடைந்தமையே இந்நலிவுக்கான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட இழப்புகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2005 ஒக்டோபர் 06 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நித்திய சேவை அனுமதிப்பத்திரங்களை கேள்விகளைக் கோரி வழங்குவதற்கான அங்கீகாரம் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டிருந்தபோதும், அவ்வாறு கேள்விகளைக் கோராது ஆணைக்குழுவானது 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் 3440 அனுமதிப்பத்திரங்களை வழங்கியிருந்தது. அவற்றுள் 64 சதவீதமானவை வருடாந்த புதுப்பித்தல் கட்டணமாகிய ரூபா 3,000 வீதத்திலும் 27 சதவீதமானவை வருடாந்தம் 15,000 கட்டண வீதப்படியும் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன. அதற்கமைய, வழங்கப்பட்ட மொத்த அனுமதிப்பத்திரங்களில் 91 சதவீதமானவை கேள்விகள் கோரப்படாது வழங்கப்பட்டமையால் ஆணைக்குழு பெறக்கூடியதாகவிருந்த வருமானம் இழப்புக்குள்ளாகியிருந்தது. அவ்வாறே ஆணைக்குழுவானது அதிவேகப் பாதை பஸ் வண்டிகளுக்கு தற்காலிக வீதிச் சேவை அனுமதிப்பத்திரங்களை அதி | பதில் வழங்கப்படவில்லை | அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள கேள்வி நடைமுறை கடைப்பிடிக்கப்பட வேண்டும். |

குறைந்த தொழில்நுட்பப் பெறுமதியின் அடிப்படையில் வழங்கியுமிருந்தது. அதற்கமைய, மீளாய்வாண்டின்போது ஆகக்கூடிய 28 நாட்களுக்கு 820 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. கேள்விகளைக் கோருவதன் மூலம் பெறக்கூடியதாகவிருந்த அதி கூடிய வருமானம் இழப்பிற்குள்ளானது.

(ஆ) 2018 ஆம் ஆண்டின்போது இலங்கையில் பல்வேறு மாகாணங்களிலும் இருந்து வடக்கு கிழக்கு வரை பயணிகள் சேவை அனுமதிப்பத்திரமின்றி ஏறக்குறைய 28 ஸ் வண்டிகள் பயணம் மேற்கொண்டிருந்தமையை நடமாடும் பரிசோதனைப் பிரிவு இனங்கண்டிருந்தது. அதற்கமைய, 17 வீதிகளில் 31 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதற்கமைய, ஆணைக்குழுவானது 06 வீதிகளுக்கு 09 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு கூறுவிலைகளைக் கோரி வெற்றிகரமாக விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்திருந்த போதும், தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கான பணிப்பாளர் சபைக் கூட்டம் நடவாமையால் அனுமதிப்பத்திரங்களை பெற முடியாது அதன் காரணமாக மீளாய்வாண்டின் போது அனுமதிப்பத்திரங்களை வழங்க

பணிப்பாளர் சபைத் தீர்மானம் உறுதி செய்யப்படாததால் புதிய பணிப்பாளர் சபைக்கு புதிய பத்திரம் சமர்ப்பிக்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவால் வழங்கப்படும் சேவைகள் மற்றும் அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் என்பவற்றை வினைத்திறன்மிக்க தாக்குவதற்கு முறைப்படி குறித்த அங்கீகாரம் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியின் போது வழங்கப்பட வேண்டும்.

முடியாது போனது. இதன் காரணமாக ஆணைக்குழுவுக்கு ஆண்டொன்றிற்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 25,815,000 ஆகும்.

## 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவை அமைப்பதற்கான அதிகார சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கம் வருமானத்தைச் சேகரிப்பது அல்லவெனினும், மாகாணங்களுக்கிடையே தனியார் பஸ் வண்டிகளில் ஆசனங்களைப் பதிவு செய்வதன் மூலம் ஆணைக்குழு வருமானத்தைச் சேகரித்திருந்தது. அப்பணிக்கு ஆணைக்குழு செலவிட்டிருந்த தொகை ரூபா 1,428,548 ஆகும். எவ்வாறாயினும், இது தொடர்பாகப் பயணிகளுக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 09(1) ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டவாறு ஆணைக்குழுவினது பணிகளும் கடமைகளும் நிறைவேறுவதற்குத் தேவையானதாகச் கருதப்படும் எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்வதற்கு ஆணைக்குழுவுக்கு அதிகாரமுண்டு. | குறித்த சேவை தொடர்பாகப் பயணிகளுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சிசு செரிய செயற்திட்டத்திற்கு மாணாக்கராலும் பாடசாலைகளாலும் 31 கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 2018 ஆம் ஆண்டின்போது அந்த 31 கோரிக்கைகளையும் நிறைவேற்ற முடியவில்லை. இச்செயற்திட்டத்தை | பதில் வழங்கப்படவில்லை. | போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் நிறுவனமாக நிறைவேற்ற வேண்டிய சமூகப் பொறுப்பை இனங்கண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள |

| | | | |
|---|---|---|---|
| | நிறைவேற்றுகையில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் நிறுவனமாக குறித்த சேவைகளுக்கு பஸ் வண்டிகளை அனுப்புதல் ஆணைக்குழுவினது மூலப்பணியாவதுடன் சமூகப் பொறுப்பும் ஆகும். அவற்றைக் கருத்திற் கொண்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை | | வேண்டும். |
| (இ) | பெஸ்டியன் மாவத்தை கழிவறைத் தொகுதி வருமானம் சம்பந்தமாகப் பரிசிலீத்தபோது அப்பெறுவனவுகளில் தாமதம் அவதானிக்கப்பட்டது. அத்தாமதம் 53 முதல் 159 நாட்கள் வரையிலானவை. அதற்கமைய, உடன்படிக்கையின் 2 ஆம் நிபந்தனை மீறப்பட்டுள்ளதுடன், 2011 பெப்ரவரி 24 ஆந் திகதிய உடன்படிக்கையின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் 3 மாதமாகக் கொடுப்பனவுகள் புறக்கணிக்கப்படுமிடத்து உடன்படிக்கை இரத்தாகலாம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், உடன்படிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பெஸ்டியன் மாவத்தை பொதுக் கழிவறைத் தொகுதியை பராமரிப்பதற்கு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட உரிமையாளர் அழைக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டுள்ளார். | உடன்படிக்கை நிபந்தனைகளுக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம் ஓராண்டிற்கு மேற்பட்ட வீதிச் சேவை அனுமதிப் | பெருமளவு பயணிகள் கோரிக்கை நிலவும் சந்தர்ப்பங்களிலும் | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | பத்திரங்களை வழங்க முடியுமெனினும், ஆணைக்குழுவானது பயணிகளின் பெருமளவு கோரிக்கை நிலவும் சந்தர்ப்பங்களில் முறையான அங்கீகாரமின்றி நாளாந்தக் கட்டணத்தை அறவிட்டவாறு வீதிச் சேவைகள் அனுமதிப்பத்திர உரித்தாளர்களுக்கு 7740 வீதி அனுமதிப்பத்திரங்களையும் 130 சாதாரண அனுமதிப்பத்திரங்களையும் வழங்கியிருந்தது. | கால அட்டவணை வெற்றிடம் நிலவும் சந்தர்ப்பங்களிலும் தற்காலிக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. இதன்போது, வேறு வீதிகளில் பயணம் செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள பஸ் வண்டிகள் பயணங்களில் ஈடுபடலாம். | வேண்டும். |
| (ஆ) | கட்டணக் கொடுப்பனவு அடிப்படையில் தற்காலிக பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்கும் பணி தென் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்தபோதும், 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஒவ்வொன்றும் 25 அனுமதிப்பத்திரங்களை உடைய 09புத்தகங்களுக்குரிய வருமானமும் பிரதிகளுடன் அமைந்த அனுமதிப்பத்திரப் புத்தகங்களும் ஆணைக்குழுவிடம் திருப்பி ஒப்படைக்கப்படவில்லை. அது தொடர்பான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தற்காலிக அனுமதிப் பத்திரப் புத்தகங்களில் 09 புத்தகங்களைத் தவிர ஏனையவை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. | ஒன்பது புத்தகங்களது வருமானமும் பிரதிகளுடனான பத்திரங்களும் வழங்கப்படாமை சம்பந்தமாக பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.4 பொருட் கொள்வனவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவானது தனியார் கம்பனி ஒன்றுடன் 2017 டிசெம்பர் 29 ஆந் திகதியன்று PAS (Process Automation System) எனும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கென ரூபா 31,735,051 பெறுமதியிலான உடன்படிக்கையில் ஈடுபட்டிருந்தது. செயற்திட்டத்தின் சகல கோவைகளையும் பூர்த்தி செய்து 2018 நவம்பர் 15 ஆந் திகதியன்று ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தபோதும், 2015 மே 30 ஆந் திகதியளவிலும் செயற்திட்டம் பூர்த்தியடையாதிருந்தது. அவ்வாறே, இச்செயற்திட்டத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததுடன், 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் இச்செயற்திட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் 35 சதவீதமாகவும் இருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | பணி நிறைவேற்றமானது உடன்படிக்கைப் பிரகாரம் நடப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 ஒப்பந்த நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 டிசெம்பர் 29 ஆந் திகதியன்று ஆணைக்குழு தனியார் கம்பனி ஒன்றுடன் ரூபா 48,773,045 க்கு கிளிநொச்சி பஸ் தரிப்பிடத்தை நிர்மாணிப்பதற்காக உடன்படிக்கையில் ஈடுபட்டிருந்தது. அது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் | | |

மேற்கொள்ளப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| (i) | கேள்வி ஆவணங்களின் பிரகாரம் 5 அண்மித்த ஆண்டுகளது நிதிக்கூற்றுக்கள் வழங்கப்பட வேண்டுவதுடன், நிர்மாண வேலைகளில் கடந்த 05 ஆண்டுகளின் போது ஆகக் குறைந்த சராசரி வருடாந்த இயலளவு ரூபா 86 மில்லியன் ஆக இருக்கவும் வேண்டும். ஒப்பந்தகாரர் கடந்த 5 ஆண்டுகளின்போது இந்த வேலை மற்றும் அதற்குச் சமமான மற்றும் கூட்டு அமைப்புடனான ரூபா 50 மில்லியன் பெறுமதியுடைய குறைந்தது ஒரு கட்டிடச் செயற்திட்டத்தையேனும் பூர்த்தி செய்திருக்க வேண்டுவதுடன், கேள்விகளைப் பகுப்பாய்வு செய்யும் பதிவேட்டின் பிரகாரம் ஒப்பந்தகாரர் அந்நிபந்தனைகள் எவற்றையும் பூர்த்தி செய்திருக்கவில்லை. எனினும், பகுப்பாய்வுக் குழு அதனைக் கருத்திற் கொள்ளவில்லை. | ஒப்பந்தகாரரின் ஆகக் குறைந்த வருடாந்த இயலளவு ரூபா 31 மில்லியனாக இருத்தல் வேண்டுமெனக் குறிப்பிடப் பட்டிருப்பதானது ஒப்பந்தகாரர் முன்னர் சமர்ப்பித்திருந்த ஓராண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரமே. ஒப்பந்தகாரரது பின்னைய 05 ஆண்டுகளின் போதிலான ஆகக் குறைந்த இயலளவு ரூபா 86 மில்லியனுக்கும் மேற்பட்டதாகும். | கேள்விகளை மதிப்பாய்வு செய்யும்போது குறித்த நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதைச் சரிவர இனங்காண வேண்டும். |
| (ii) | 2006 பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.11(4) மற்றும் (5) பிரிவுகளின் பிரகாரம் ஒப்பந்தகாரர் நிர்மாண வேலைகளைப் புறக்கணித்திருந்த போதும், வேலைப் புறக்கணிப்புச் செய்த ஒப்பந்தகாரரது நிரலில் பெயரை ஏன் உள்ளடக்கலாகாது என்பதற்கான காரணத்தை எழுத்து மூலம் அறிவிக்குமாறு ஒப்பந்தகாரருக்கு எழுத்துமூலம் அறிவிக்கவில்லை. | தர்மதாச கன்ஸ்டிரக்சன் அன்ட் என்டர்பிரைசசின் முகாமைத்துவப் பணிப்பாளர் சுகவீன முற்றிருப்பதால் கிளிநொச்சி பஸ் தரிப்பிடத்தின் எஞ்சிய வேலையை மேற்கொள்ள முடியாதுள்ளதாக எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது | பொருட் கொள்வனவு ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (iii) உடன்படிக்கைப் பிரகாரம் நிர்மாண வேலையை பூர்த்தி செய்யும் நடவடிக்கைகள் புறக்கணிக்கப்பட்டமையால் ஆணைக்குழு உடன்படிக்கையை இரத்துச் செய்திருந்தது. இதன்போது பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளுக்கென ஒப்பந்தகாரருக்கு ரூபா 16,469,363 கொடுப்பனவு செய்யப்படுகையில் உடன்படிக்கைப் பிரகாரம் தாமதக் கட்டணமாகிய ரூபா 2,438,652 அறவிடப்படவில்லை. | இந்த நிர்மாண வேலைக்காக இறுதி விலைப் பட்டியல் சமர்ப்பிக்கப் படவில்லை. அந்த விலைப் பட்டியலுக்குரிய கொடுப்பனவை சான்றுறுதிப் பத்திரத்தில் தாமதக் கட்டணம் கழித்துக் கொள்ளப்பட வேண்டுமென மதியுரை நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது | ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1. ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், நிதிக் கூற்றுக்கள் ஒரு மாத தாமதத்தின் பின்னர் 2019 ஏப்ரல் 29 ஆந் திகதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | - | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக் கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சிசு செரிய, கெமி செரிய, நிசி செரிய, ஆகிய சேவைகளுக்கான பஸ் வண்டிகளது எண்ணிக்கையை முறையே 100, 15, 100 ஆக அதிகரித்துக் கொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், அதில் அடையப் பெற்ற இலக்குகளின் சதவீத எண்ணிக்கை 57, 27, 23 என்பனவாகும். | குறித்த மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபைகளது சேவை வழங்கல் சம்பந்தமாக பங்குதாரர்கள் முன் வராமை மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போக்களில் நிலவும் ஊழியர் பற்றாக்குறை, பஸ் வண்டிகளது பற்றாக்குறை என்பவற்றால் பஸ் வண்டிகளை ஈடுபடுத்த முடியாத போனமை என்பன காரணங்களாகும். | திட்டமிடப்பட்ட இலக்கை அடைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4.3 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் வரவு, செலவு திட்டமிடப்பட்ட வருமானத்தை உள்ளவாறான வருமானத்துடன் ஒப்பிடுகையில் 100 சதவீதம் முதல் 958.57 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. வரவு, | எதிர்வரும் ஆண்டில் வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவின மீதிகளுக்கிடையே | வரவு, செலவுத் திட்டத்தை ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தக் |

செலவுத் திட்டமிடப்பட்ட செலவினத்துடன் உள்ளவாறான செலவினம் கணக்கிணக்கம் செய்யப்படுகையில் 104.46 சதவீதம் முதல் 244.23 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.
இதற்கமைய, வரவு, செலவுத் திட்டமானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப்
பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

வேறுபாடுகளைக் குறைத்துக் கொள்வதில் கவனம் செலுத்தப்படும்.

கூடியவாறு அதனை சாத்தியமானவாறு தயாரிப்பதற்கும் கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் முறைப்படுத்தற் தேவைகள் தொடர்பாக 2018 இல 19ஐக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்**

**சட்டதிட்டங்கள்/ கட்டளைக்கான உசாவுகை**

**(அ) 1971 இல 38 கொண்ட நிதிச் சட்டம்**

**(i) 10(5) பிரிவு**

2017ஆம் ஆண்டில் 300 மில்லியன் ரூபா பணம் மற்றும் 2018ஆம் ஆண்டில் 100 மில்லியன் ரூபா பணம் பொதுத் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தயவுடன் அறிவிக்கின்றேன். உரிய கணக்காய்வு விசாரணையில் குறிப்பிட்டுள்ள ரூபா 165,284,562.00 மிகை நிதிசார் மிகை அல்ல எனத் தயவுடன் அறிவிக்கின்றேன்.வ

(ii) சட்டத்தின் 11ஆம் பிரிவு மற்றும் ஜுன் 02ஆந் திகதி கொண்ட இல பீஈடீ/12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 பிரிவு

தற்காலிக மேலதிகப் பணத்தினை முதலீடு செய்வதற்கு திறைசேரியின் அனுமதியினைப் பெறுவதற்காக தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உரிய கடிதத்தின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இல ஆர்ரீ/பீ/என்ரீசீ/எவ்ஏ/2012/22 கொண்ட கணக்காய்வு விசாரணைக்கான பதிலுடன் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.)

எவ்வாறெனினும் 2012 ஆகஸ்ட் மாதம் 22ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பிலான பொதுக் கூட்டத்தின் போது, குறுகிய கால மேலதிக நிதியங்கள் ஏழு நாள் கோரல் வைப்புக்களில் முதலீடு செய்வதற்குப் பதிலாக ஒரு பகுதியினை கூடிய வட்டி வருமானத்தைப் பெறுவதற்காக நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (பொது முயற்சிகள் தொடர்பிலான பொதுக் கூட்டத்தின் குறிப்புக்களின் பிரதியொன்று இல ஆர்ரீ/பீ/என்ரீசீ/எவ்ஏ/2012/22 கொண்ட கணக்காய்வு விசாரணைக்கான பதிலுடன் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.)

அதற்கு மேலதிகமாக தற்காலிக மேலதிகப் பண முதலீடு செய்வதற்கு திறைசேரியின் அனுமதியினைப் பெற்றுக்கொள்வதற்கு போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சிற்கு 2019.02.07ஆந் திகதி கொண்ட கோரிக்கை ஒன்று முன்வைத்துள்ளதுடன் **இது வரையில் அதற்கு பதிலொன்று கிடைக்கவில்லை என்பதையும் தயவுடன் அறிவிக்கின்றேன்.**

(ஆ) 1991 இல 37 கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 08ஆம் பிரிவு

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு அடிப்படைத் தேவைகள் இரண்டைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அதாவது,

01. குறித்த பாதைக்கான பயணிகள் கேள்வி இருத்தல் வேண்டும்.

02. உரிய இரண்டு மாகாண போக்குவரத்து அதிகார சபைகளிலிருந்து நேரங்களைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் தரிப்பிட வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு இசைந்து பரிந்துரை செய்தல் வேண்டும்.

அதன் படி, 2018ஆம் ஆண்டில் 70 புதிய பாதைகளுக்கு கோரல்கள் கிடைத்ததுடன், அவ்வெல்லா பாதைகளுக்கும் உரிய மாகாண அதிகார சபைகளிடம் இருந்து பரிந்துரை கோரப்பட்டது. எனினும், ஒரு பாதைக்காக மாத்திரம் உரிய போக்குவரத்து அதிகார சபையின் பரிந்துரை கிடைக்கப் பெற்றுள்ளதுடன், ஏனைய பாதைகளுக்கு மாகாண போக்குவரத்து அதிகார சபைகள் இயங்கும் நேரங்கள் மற்றும் தரிப்பிட வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் மேற்கொண்டிருக்கவில்லை.

அதன்படி, அப்பாதைகளை ஆண்வு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தேவையற்றது என்பதால் ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை.

எவ்வாறெனினும், பரிந்துரை கிடைத்துள்ள பாதையினை ஆய்வு செய்து, பயணிகள் கேள்வி இருப்பின், விலைமனு கோரல் மேற்கொள்ளப்படுவதுடன், ஏற்கனவே விலைமனு முறைமை திருத்தஞ் செய்யப்பட்டு வருகின்றது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்ட இல 09(l) இன் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு ஆணைக்குழவின் அதிகாரம் மற்றும் கடமையினை நிறைவேற்றுவதற்கு அவசியம் எனக் கருதும் எந்தவொரு நடவடிக்கையினையும் மேற்கொள்வதற்கு ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உள்ளது. அதன் படி தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் சட்டத்தில் காணப்படும் விதிப்புரைகளின் பிரகாரம் இதனை ஆரம்பிப்பதன் பிரதான நோக்கமாவது பயணிகளுக்கு தரமிக்க மற்றும் நம்பிக்கைமிகு மற்றும் நன்கு வசதி கொண்ட போக்குவரத்துச் சேவையொன்றினை வழங்குவதாகும்.

அவ்வாறே, பேருந்து நிறுத்துமிடங்களில் காணப்படும் பயணிகள் நெருக்கடியினை முடிந்தளவில் குறைத்தல், பணப் புழக்கத்தைக் குறைத்தல், தற்போது மூன்றாம் தரப்பினராக தனியார் நிறுவனங்கள் சிற்வற்றால் முறையற்ற விதத்தில் அதிக சேவைகள் கட்டணம் அறவிட்டு நடாத்தப்பட்டு வரும் முன்பதிவு நிலையங்கள் (Booking Centers) மற்றும் இடையறா சேவைகள் (Online Reservation) ஆகியவற்றைத் தவிர்த்தல் என்பன இச்சேவையினைச் செயற்படுத்துவதற்கான ஏனைய நோக்கங்களாகக் குறிப்பிடலாம்.

- குறிப்பிட்ட கணக்காய்வு விசாரணையில் குறிப்பிட்டுள்ளவாறு செயற்றிட்டத்தினை நிறைவு செய்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு 2018 நவம்பர் 15ஆந் திகதியே ஒப்படைக்க வேண்டியிருந்தது.

- எனினும் இச்செயற்றிட்டத்தின் மூலம் நிறுவனத்தினுள் செயற்படும் பிரதான செயற்பாடுகளுக்கு தானியங்கும் முறைமை நிர்மாணிக்கப்படுவதுடன், அதன் போது உரிய நிறுவனத்தால் விலைமனுவினைப் பெறும் போது செயற்றிட்டத்தினைப் பூர்த்தி செய்வதற்கு எடுக்கும் காலத்தினைக் கணக்கிட்டு இருப்பது இச்செயற்பாடுகளில் உள்ளடங்கியுள்ள விடய பரப்பு குறித்து முறையான விளக்கமின்றி இருந்தமையாலும் அதற்கு மேலதிகமாக கீழ்வரும் விடயங்களும் உரிய காலப்பகுதி நீடிப்பதற்கு ஏதுவாக அமைந்தன.
    - செயற்பாடுகளை மீள்நிர்மாணம் செய்தலை அறுதிசெய்வதற்கு (BPR Verification) உரிய நிறுவனம் மதிப்பிட்ட காலம் 03 கிழமைகள் ஆவதுடன், அதனை நடைமுறைப்படுத்தவதற்கு எடுத்த காலம் 08 கிழமைகளாகும். அதாவது அந்நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக்கு ஒவ்வொரு திணைக்களத்திலும் உள்ள ஒவ்வோர் அலகிலும் வெவ்வேறாக தேவைகளை இனங்காணும் செயலமர்வுகளை நடாத்த வேண்டியேற்படல்.
    - கட்டம் 01இல் மென்பொருள் தேவைகள் விபரக்குறிப்பைத் தயாரித்தல் மற்றும் அதனை உறுதிப்படுத்திக் கொள்ளல் (SRS Preparation and Sign off) என்பவற்றிற்கு மதிப்பிடப்பட்ட காலம் 03 கிழமைகள் ஆவதுடன், உண்மையிலேயே எடுத்த காலம் 09 கிழமைகளாகும். அதாவது குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் இத்திணைக்களத்தின் பிரதான உத்தியோகத்தர்கள் விசேட பண்டிகை சேவை கடமையில் ஈடுபட்டிருந்த காரணத்தால் அதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.
    - மேற்படி விடயங்களுக்கு மேலதிகமாக இதன்போது பிரதானமாக தாமதமாவதற்குரிய காரணம் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் (ICTA) வழங்குவதற்கு இணங்கியுள்ள கிளவூட் சேவை (LGC 2.0) குறிப்பிட்ட பிரகாரம் பெற்றுக் கொடுப்பதற்கு இயலவில்லை என்பதுடன், அது 2018 ஒக்டோபர் 01ஆந் திகதியே பெற்றுக் கொடுக்கப்பட்டது.

அதன்படி உரிய நிறுவனத்தினால் செயற்றிட்டத்தினை ஆரம்பிப்பதற்கு முன்னர் பெற்றுக் கொடுக்கப்பட்ட காலம் விஞ்சுவதற்கு மேற்படி காரணங்கள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

இச்செயற்றிட்டம் பிரதான 03 கட்டங்களின் ஊடாக செயற்படுத்தப்படுவதுடன், ஏற்கனவே கட்டம் 01 முழுமையாகப் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன், கட்டம் 02இல் ஒவ்வொரு தொகுதிகளுக்கும் உரிய பாவனையாளர் இணக்கப்பாட்டுப் பரிசோதனை (UAT-User Acceptance Testing) மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதனை 2019-09ஆம் மாதம் நடுப்பகுதியில் பூர்த்தி செய்வதற்கு இயலுமாக இருக்கும். அவ்வாறே கட்டம் 03இல் மென்பொருள் தேவைகள் தொகுதிகளின் நிர்மாணிப்பு (Software Requirement Specification Design stage) மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன் படி, முழு செயற்றிட்டத்தின் பௌதிக முன்னேற்றம் இது வரையில் 70% இனையும் கடந்த நிலையில் காணப்படுவதுடன், நிதிசார் முன்னேற்றம் 2018 திசெம்பர் 31ஆந் திகதியாகையில் 35மூஇனைக் காட்டுகின்றமை ஒப்பந்தத்தின் பிரகாரம் முற்பணத் தொகை மற்றும் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட

பணிகளுக்குரியதான முன்வைக்கப்பட்ட வழங்கல்களுக்கு (Deliverables Sets) இணங்க கொடுப்பனவுச் சந்தர்ப்பங்கள் 02 ஆகியவை தொடர்பில் ஆகும்.

### 3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

**(அ)** 2018 ஆம் ஆண்டில் சிசு செரிய சேவைகளுக்கு 31 கோரல்கள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழவிற்கு கிடைத்துள்ளன. அவற்றுள் ஒரு சேவைக்கு மேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பரிந்துரையின் படி திருத்தத்துடன் சிசு செரிய சேவையினைப் பெற்றுக் கொடுப்பதற்கு பேருந்து ஓட்டுனர்களைச் சிபாரிசு செய்து தருமாறு உரிய மாகாணப் போக்குவரத்து அதிகார சபைகளுக்கு மற்றும் அல்லது இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மாகாண போக்குவரத்து ஆதிகார சபைகளிடம் இருந்து இச்சேவைகளுக்கு ஓட்டுனர்கள் சிபாரிசு செய்யப்படாதிருப்பதுடன், இலங்கைப் பேக்குவரத்துச் சபை டிப்போவில் காணப்படும்சாரதிகள், நடத்துனர்கள் பணிக்குழுவின் பற்றாக்குறை மற்றும் பாடசாலைச் சேவைகளுக்கு புதிய பேருந்துகள் இல்லாமை ஆகிய விடயங்களின் அடிப்படையில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் மூலம் ஒப்படைத்துள்ள புதிய பாடசாலைச் சேவைகளை ஆரம்பிப்பதில் சிக்கல் தன்மை காணப்படுவதாக இலங்கைப் போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர் (இயக்குதல்), 2018.10.02ஆந் திகதி கொண்ட கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த 31 கோரல்கள் மாகாணத்தினுள் உள்ள பாதைகளுக்கு (மாகாணங்களுக்கு இடையில் அற்ற) கோரப்பட்டுள்ளதுடன் அப்பாதைகளுக்கு பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்கி சிசு செரிய சேவையுடன் இணைத்துக் கொள்வதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு சட்டரீதியான அதிகாரம் இல்லை. அதனால், அவ்வெல்லா கோரிக்கைளும் இபோசவிற்கு மற்றும் உரிய மாகாண போக்குவரத்து அதிகார சபைகளுக்கு அனுப்பப்பட்டு அவர்கள் அச்சேவைகளுக்கான பேருந்துகளை வழங்குவதற்கு பரிந்துரை செய்வார்களேயாயின் மாத்திரம் சிசு செரிய சேவையில் இணைத்துக் கொள்ள முடியும்.

எனினும், மாகாண போக்குவரத்து அதிகார சபைக்கு கிடைத்துள்ள கோரல்களுக்கு அவ்வதிகார சபைகள் ஊடாக வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கு அமைய மற்றும் இபோசவினால் நேரடியாகப் பரிந்துரைக்கப்பட்டுள்ள 57 சேவைகளுக்கு 2018ஆம் ஆண்டில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சிசு செரிய சேவையினைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

**(ஆ)** 1991 இல 37 கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 24ஆவது பிரிவின் பிரகாரம் பயணிகள் அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கு ஆணைக்குழுவிற்கு ஏற்பாடுகள் காணப்படினும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்கும் வழிமுறை குறித்து சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. தே.போ.ஆ. நிறுவப்பட்ட காலத்தில் இருந்து 2008ஆம் ஆண்டு வரை பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் ஒவ்வொரு தனிநபரும் கோரும் அடிப்படையிலேயே வழங்கப்பட்டது. அதன்போது திறந்த மற்றும் வெளிப்படைத்தன்மை இருக்கவில்லை. அப்பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களின் ஆயுட்காலம் தொடர்பில் எதுவிதக் குறிப்பும்

இல்லாதிருந்ததுடன் 3000.00 ரூபா தொகையொன்றினைச் செலுத்தி வருடாந்தம் இற்றைப்படுத்தப்பட்டது.

2005ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்ட இல அப 036/031/1461/05/ கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது விலைமனு முறைமையினைப் பின்பற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டதுடன், அதன் பிரகாரம் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இம்முறைமை ஊடாக முதன்முதலாக 2008ஆம் ஆண்டில் விலைமனு கோரப்பட்டுள்ளது.

அதன் படி தே.போ.ஆ. நிறுவப்பட்ட காலத்தில் இருந்து 2008ஆம் ஆண்டு வரை அதாவது ஏறக்குறைய 15 வருட காலம் முறையான முறைமையொன்று இல்லாது சட்டத்தின் விதிமுறைகளுக்கு மாறாக பயணிகள் சேவை அனுமதிப்பத்திம் வழங்கப்பட்டுள்ளது. 2005ஆம் ஆண்டில் அமைச்சரவையின் அனுமதி பெற்ற விலைமனு முறைமையினாலும் சட்டத்தின் விதிமுறைகளுக்கு மாறாக பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தின் காலம் முறையே 5 வருடங்கள் மற்றும் மேலும் 3 வருடங்கள் என 8 வருட காலத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து விடயம் தொடர்பில் விளக்கத்தினைப் பெற்றதன் பின்னர் 2017ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 21 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் சட்டத்தின் 25ஆவது மற்றும் 30ஆவது விதிமுறைகளுக்கு அமைய 06 வருட காலத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

2018.12.31ஆந் திகதியில் பெற்றுக் கொடுத்த தரவுகளின் படி செல்லுபடியாகும் 3152 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களில் விலைமனு முறைமையின் கீழ் வழங்கப்பட்டு செல்லுபடியாகும் எனக் காணப்படுவது 288 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் ஆகும். அதன் படி செல்லுபடியாகும் நிலையில் காணப்படும் எஞ்சிய 2864 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களும் விலைமனு முறைமை அமுல்படுத்தப்படுவதற்கு முன்னர் வழங்கப்பட்ட பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களாவதுடன், அப்பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களின் காலம் குறித்து எவ்விதக் குறிப்பும் இல்லை.

அதனால் அந்த 2864 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களையும் இரத்துச் செய்து மீண்டும் விலைமனு கோரும் போது பயணிகள் சேவை அனுமதிப்பத்திர உரிமையாளர்களின் எதிர்ப்பு எழக்கூடும். கணக்காய்வு விசாரணையில் குறிப்பிட்டுள்ள பயணிகள் சேவை அனுமதிப்பத்திர எண்ணிக்கையில் ரூபா 3000.00 வீதம் செலுத்தப்பட்ட பத்திர எண்ணிக்கையில் விலைமனுப் பத்திரங்களும் அடங்கியுள்ளன.

தற்போது காணப்படும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் ஏதேனும் திருத்தத்திற்கு உட்படும் சந்தர்ப்பத்தில் (பாதை திருத்தம் மற்றும் உறவுமுறை மீதான உரிமை மாற்றம்) அப்பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களின் வருடாந்த இற்றைப்படுத்தும் கட்டணம் 3000.00 ரூபா முதல் 15,000.00 ரூபா வரை அதிகரிக்கப்படும்.

அதன் பிரகாரம், தற்போது செல்லுபடியாகும் நிலையில் காணப்படும் 288 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் விலைமனுக் கட்டணம் மற்றும் 3000.00 ரூபா அறவிடலுடனும், 940

அனுமதிப்பத்திரங்கள் 15,000.00 ரூபா அறவிடலுடனும் வருடாந்தம் இற்றைப்படுத்தப்படும். எஞ்சிய பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களுக்கு அறவிடப்படும் 3000.00 ரூபா தொகையினை அதிகரிப்பது குறித்து தற்போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டியில் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன், இது குறித்து எதிர்காலத்தில் மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து உரிமையாளர்களுடனும் கலந்துரையாடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டில் பாதைகள் திருத்தத்தின் மூலம் அதிவேகப் பாதைக்கு வழங்கப்பட்ட 56 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் 2015ஆம் ஆண்டில் இரத்துச் செய்யப்பட்டு அவ் ஓட்டுனர்களின் பழைய பாதைகளுக்கு இணைக்கப்பட்டுள்ளன. இப்பேருந்துகள் அதிவேகப் பாதையில் ஓடிய காலத்தில் பயணிகள் அச்சேவைகளுக்கு பழக்கப்பட்டிருந்தமையால் பயணிகளின் கேள்வியினைப் பூர்த்தி செய்வதற்கும் தொடர்ந்தும் அச்சேவையினை மேற்கொள்வதற்கும் தற்காலிக அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

மேலும், தற்காலிக பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும் பாதைகளுக்கு நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு 03 சந்தர்ப்பங்களில் போது விளம்பரங்களின் மூலம் விலைமனுக்களை கோருவதற்கு நடவடிக்கை எடுப்பினும் அதற்கு எதிராக ஓட்டுனர்களால் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனால், இல 25இன் கீழ் கோரப்பட்ட விலைமனு மூலம் 21 நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு முடிந்துள்ளது.

(இ) தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் அதிக பயணிகள் கேள்வி உள்ள போது மற்றும் நேர அட்டவணை இடைவெளியின் போதும் தற்காலிக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். அதன் பிரகாரம், அதிவேகப் பாதையில் இயங்கும் பேருந்தொன்று தமது நேர அட்டவணையில் காணப்படும் பயணமுறையினை மேற்கொள்ளாத சந்தர்ப்பத்தில் அதற்குப் பதிலாக இவ் அதிவேகப்பாதையிலோ அல்லது வேறு பாதையிலோ இயங்குவதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள பேருந்தொன்று வெற்றிடப் பயணமுறைக்குப் பதிலாக ஓடுவதற்கு ஈடுபடுத்தப்படும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் மேலதிகமாக ஈடுபடுத்தப்படும் பேருந்துகள் தமது பயணமுறைகளின் பின்னர் மேலதிகமான பயணமுறையில் இயங்குமாயின் அதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

அதன் படி, தென் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபை மூலம் மற்றும் அதிவேகப் பேருந்துச் சேவைகள் ஆரம்பமாகும் கடவத்தை, கடுவளை மற்றும் மகரகமை பேருந்து நிலையங்களில் கடமையில் ஈடுபட்டுள்ள நேரக் காப்பாளர்களால் அதிவேகப் பாதையில் இயங்குவதற்கு வழங்கப்பட்டுள்ள தற்காலிக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுவது அப்பாதையில் பேருந்து நேர அட்டவணையின் அவசியத்தின் படி இயங்குகின்ற மேலதி பயணமுறைகளுக்கும் கூடிய பயணிகள் கேள்வி காணப்படும் சந்தர்ப்பங்களிலும் ஆகும்.

வார இறுதி மற்றும் நீண்ட விடுமுறை நாட்களில் பெரும் பயணிகள் கேள்வியினைப் பூர்த்தி செய்வதற்கு மேலதிகமாக பேருந்துகளை ஈடுபடுத்துதல் அல்லது மேலதிக பயணமுறைகளைப் பெற்றுக் கொடுத்தல் மேற்கொள்ளப்படும். அவ்வாறு வழங்கப்படுவது பயணிகளுக்கு அவசரமாகத் தமது பயண முடிவிடத்திற்கு செல்வதற்கு தேவையான பேருந்துகளை

வழங்குவதற்காகும். நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தினைக் கொண்ட பேருந்துகளுக்கு மாத்திரமே தற்காலிக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும்.

இந்நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொண்ட சந்தர்ப்பங்களில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு அல்லது மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்கு அரசின் நியமிக்கப்பட்ட கட்டணங்கள் ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள பேருந்துகள் ஆகும்.

**(ஈ)** தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் மூலம் தென் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்கு 2018ஆம் ஆண்டினுள் வழங்கப்பட்டுள்ள எல்லா தற்காலிக அனுமதிப்பத்திர புத்தகத்தின் பிரதியுடன் வருமானம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அவ்வாறே தென் மாகாண போக்குவரத்து அதிகார சபை மூலம் அவ் அதிகார சபைக்கு உரிய மாவட்ட அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட புத்தக மற்றும் வருமான விபரங்கள் அவ் அதிகாரசபையின் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு மீண்டும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு அனுப்பப்படுவதால் அதற்கு ஒரு குறிப்பிட்ட கால அளவு எடுக்கும்.

**(உ)** 2018ஆம் ஆண்டில் செயற்படு திட்டத்திற்கு அமைய எதிர்பார்க்கும் இலக்குகள் மற்றும் அடைந்து கொள்ள முடிந்த இலக்குகள் குறித்து விபரமான அறிக்கை பின்வருமாறு.

| செயற்றிட்டம் | 2018இல் ஆரம்பிக்க இலக்குவைத்த சேவைகள் எண்ணிக்கை | புதிதாக ஆரம்பிக்க முடிந்த சேவைகளின் எண்ணிக்கை | அதிகரித்துக் கொள்ள முடியாது போன இலக்குகள் | அடைந்து கொள்ள முடியாத இலக்கு சதவீதமாக | அடைந்து கொள்ள முடிந்த இலக்கு சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| சிசு செரிய | 100 | 57 | 43 | %43 | %57 |
| கெமி செரிய | 15 | 04 | 11 | %73 | %27 |
| நிசி செரிய | 100 | 50 | 50 | %50 | %50 |

சிசு செரிய செயற்றிட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைய முடியாமைக்கு, உரிய மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபைகளினால் சேவைகளை வழங்குவதற்கு ஓட்டுனர்களை முன்வைக்காமை மற்றும் இபோச டிப்போக்களில் காணப்படும் ஊழியர் பற்றாக்குறை, பேருந்துப் பற்றாக்குறை ஆகியவற்றினால் பேருந்துகளை ஈடுபடுத்தவதற்கு முடியாமை என்பன ஏதுவாயின.

கெமி செரிய செயற்றிட்டத்தின் கீழ்

| மாகாணங்கள் | வடமேல் | மத்திய | கிழக்கு | மொத்த சேவைகள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பாதைகளின் எண்ணிக்கை | 05 | 01 | 13 | 19 |
| விலை மனு கோரப்பட்ட பாதைகளின் எண்ணிக்கை | 05 | 01 | 13 | 19 |

வடமேல் மாகாணத்தில் 05 சேவைகள், மத்திய மாகாணத்தில் 01 சேவை, கிழக்கு மாகாணத்தில் 13 சேவைகள் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதில் வடமேல் மாகாணத்தில் 02 சேவைகளுக்கு 2018ஆம் ஆண்டில் ஒப்பந்தம் செய்யப்பட்டது. 2019ஆம் ஆண்டில் மேலும் 02 சேவைகள் ஒப்பந்தம் செய்யப்படடுள்ளன. ஒரு சேவைக்கு விலைமனுதாரர் முன்வரவில்லை.

அவ்வாறே, மத்திய மாகாணத்தின் சேவைக்கும் விலைமனுதாரர் முன்வந்திருக்கவில்லை.

2018 செப்தெம்பர் மாதம் முதல் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபைக் கூட்டம் நடாத்தப்படாமை காரணமாக கிழக்கு மாகாணத்தில் 13 சேவைகளுக்கு விலைமனு கோரல் நடவடிக்கை தாமதமாகியது. இது வரையில் கிழக்கு மாகாணத்தில் 13 சேவைகளுக்கு விலைமனு கோரப்பட்டதன் பின்னர் குறைந்த விலையினை முன்வைத்த 13 விலைமனுதாரர்கள் தெரிவு செய்யப்பட்டு ஒப்பந்தம் செய்து கொள்வதற்காக பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெற்று ஒப்பந்தத்தினைக் கைச்சாத்திடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன் படி 2018ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபை கூட்டங்கள் நடாத்தப்பட்டிருப்பின் உரிய இலக்கு வரை (15) சேவைகளை ஆரம்பிப்பதற்கு முடியுமாக இருந்திருக்கும்.

நிசி செரிய செயற்றிட்டத்தின் கீழ் 2018ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட 100 இலக்குகளில் 50இனை அடைந்து கொள்வதற்கு இயலுமாகியது. அவ்வாறே, உண்மையிலேயே இயங்குவதாக நடமாடும் பிரிவின் பரிசோதனைகளில் இருந்து உறுதி செய்யப்பட்ட சேவைகளை ஆரம்பிப்பதற்கு ஒப்பந்தம் செய்து கொள்வதற்காக டிப்போ முகாமையாளர்கள் மற்றும் டிப்போ இயக்க முகாமையாளர்கள் குறிப்பிட்ட நாட்களில் ஆணைக்குழுவிற்கு வருகைத் தராமையும் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைய முடியாமைக்கு ஏதுவாகியது.

**(ஊ)** இவ்விடயத்திற்கு உரியதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் பெஸ்ரியன் மாவத்தை பொது மலசலகூத் தொகுதியைப் பராமரிப்பதற்கான ஒப்பந்தம் செய்து கொண்ட நிறுவனத்தின் (மேதா என்ரபிரைசஸ்) உரிமையாளர் நிறுவனத்திற்கு அழைக்கப்பட்டு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதுடன், 2019 மார்ச் மாதம் என்னாலும் ஒப்பந்தத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு வகை கூறுதல் வேண்டும் வாய்மொழி மூலமாகவும் எழுத்து மூலமாகவும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் படி எதிர்வரும் காலத்தில் உரிய கொடுப்பனவுகளை உரிய முறையில் மேற்கொள்வதற்கு மேதா என்ரபிரைசஸ் நிறுவன உரிமையாளர் இணங்கியுள்ளார்.

**(எ)** நடமாடும் பரிசோதனைப் பிரிவின் உத்தியோகத்தர்கள் அனுமதிப்பத்திரங்கள் இன்றி இயங்கியுள்ளதாக இனங்காணப்பட்ட பேருந்துச் சேவைகள் மற்றும் நேர அட்டவணை வெற்றிடம் உள்ளடங்கிய 06 பாதைகளின் 09 அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு விலைமனு இல 27இன் கீழ் நிரந்தர அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் படி அம்மனுவினைத் திறந்து தெரிவு செய்யப்பட்ட ஓட்டுனர்களுக்கு

புதிய நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு பணிப்பாளர் சபை பத்திரமொன்று முன்னைய பணிப்பாளர் சபையில் முன்வைக்கப்பட்டதுடன் அது அனுமதிக்கப்பட்டது. எனினும், அப்பணிப்பாளர் சபைத் தீர்மானம் உறுதிப்படுத்தப்படாமையால் புதிய பணிப்பாளர் சபைக்கு பத்திரமொன்றினை முன்வைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது அம்மனுவினை இரத்துச் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது.

ஜனக்க மல்லிமாரச்சி

தலைவர்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு